Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 09 வெள்ளிக்கிழமை (23.01.2015) பக்கங்கள் 20 ஓசை – 115

# அமைச்சர் சம்பிக்க உத்தரவு நொதேர்ன் பவருக்கு மூடுவிழா

(கொழும்பு)


யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் இயங்கி வந்த தனியாருக்கு சொந்தமான நொதேர்ன் பவர் மின்நிலையத்தை உடனடியாக மூடுமாறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்றையதினம் தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட நிலையில் நேற்றையதினம் நிறுவனத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு மேற்படி நிறுவனமும் இழுத்து மூடப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமையத்தின் தலைவர் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையிலான குழுவினர் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பில் அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சரை சந்தித்துக் கலந்துரையாடியதன் எதிரொலியாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த சந்திப்புத் தொடர்பாக சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமையத்தின் முக்கியஸ்தரும், மருத்துவருமான ப.நந்தகுமார் தகவல் தருகையில்,

நாம் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமையத்தின் தலைவர் சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் முற்பகல் 10 மணியளவில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சர் சம்பிக்க ரணவக்கவை கொழும்பிலுள்ள எரிபொருள் மின்சக்தி அமைச்சின் தலைமைக் காரியாலயத்தில் சந்தித்தோம். இதன் போது அமைச்சருடன் அவரது உயர் அதிகாரிகளும் உடனிருந்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க



## வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விசேட அதிகாரப்பகிர்வு வேண்டும்

### புதிய அரசை வலியுறுத்தும் ஈ.பி.டி.பி.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் இருந்து தொடங்குவதே நடைமுறைச் சாத்தியமான ஆரம்பமாக அமையும் என்றும், அது மேலும் செழுமைப்படுத்தப்பட வேண்டும் என்றும், அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விசேட அதிகாரப்பரவல் ஏற்பாடு வேண்டுமெனவும் நாம் கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகஇதனையே கோரிக்கையாக விடுத்து வருகின்றோம். அந்தவகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான புதிய அரசின் பிரதமர் ரணில் விக்ரமசிங்க 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி மாகாணங்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிக்கவுள்ளதாக கூறியிருப்பதை ஈ.பி.டி.பி வரவேற்பதாக அக்கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

19 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கில் ஆட்சிமாற்றம்; உடனடியாக சாத்தியப்படாது

கிழக்கின் ஆட்சிமாற்றம் குறித்து தன்னால் எதுவும் செய்யமுடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னைச் சந்தித்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பிரமுகர்களுக்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று வியாழக் கிழமை தமிழ்த்தேசியக்கூட்

19 ஆம் பக்கம் பார்க்க


## கடந்த கால ஊழல்கள் கண்டறிய குழு நியமனம்

நாட்டில் கடந்த காலங்களில் நடந்த பாரிய ஊழல், மோசடிகளைக்கண்டறிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 11 பேர் அங்கம் வகிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன நேற்று நடைபெற்ற அமைச்ச

19 ஆம் பக்கம் பார்க்க

## ரெலிகொம் தலைவராக ஜனாதிபதியின் சகோதரர்



ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்துக்கு புதிய தலைவராக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் குமாரசிங்க சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார். தகுதி அடிப்படையில் மிகமூத்த அதிகாரியான குமாரசிங்க சிறிசேன, ரெலிகொம் நிறுவனத்தின் தலைமைக்கு பொருத்தமானவர் என்ற காரணத்தினாலேயே இப்பதவி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடும்ப உறுப்பினர்களை அரச நியமனங்களுக்கு பயன்படுத்த மாட்டேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - தேர்தல் காலததில் தெரிவித்திருந்த நிலையில்,

19 ஆம் பக்கம் பார்க்க

## தன்மீதான குற்றச்சாட்டு பத்திரத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் அனந்தி

தன் மீதான குற்றச்சாட்டு பத்திரத்தை தமிழரசுக் கட்சியிடம் இருந்து எதிர்பார்த்து காத்திருப்பதாக வட மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருக்கு கடந்த 20ஆம் திகதியிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எனது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலும் தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு வலுச்சேர்க்கும் நோக்கிலும் கட்சியின் முடிவென்ற பெயரில் கடந்த 3 ஆம் திகதி ஜனவரி 2015 இல் தமிழரசுக் கட்சியின் முனனாள் தலைவர் இரா. சம்பந்தனின் தலைமையில் பத்திரிகை

19 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ சதிப்புரட்சி; பீரிஸிடம் விசாரணை

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு மறுநாள் இராணுவப்புரட்சி மேற்கொள்ளப் படவிருந்தமை தொடர்பில் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் நேற்று மாலை வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நல்லாட்சி என்றுகூறி பதவிக்கு வந்த புதிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகளுக்காக தாம் வருந்துவதாக பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவர் விடுத்துள்ள அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளின் போது கடந்த 9 ஆம் திகதி அதிகாலை அலரி மாளிகையில்

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரதமநீதியரசர் பதவி விலகவில்லை பேச்சாளர் மறுப்பு

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக வெளிவந்துள்ள செய்திகள் முற்றிலும் பொய்யென நீதியரசரின் ஊடகப் பேச்சாளர் வழக்கறிஞர் விஜயரத்ன கொடிப்பிலி தெரவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை உச்சநீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களிடம் இதைத் தெரிவித்த அவர், பிரதம நீதியரசர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக சில ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்திகள் முற்றிலும் பொய்யானவை என்றும் கூறினார்.

பிரதம நீதியரசர் தமது பதவியை இராஜினாமா செய்யவில்லை என்றும் அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

தமிழ் தேசியுக் கூட்டமைப்பினர் ஜனாதிபதியுடன் வியாழனன்று முக்கிய சந்திப்பு -

கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைத்தல், முதலமைச்சர் பதவி விவகாரம் தொடர்பில் பேசப்படுமென த்லைவர் சம்பந்தன் தெரிவிப்பு.

- செய்தி




அகிம்சைப் போர் தொடங்காத 23 வது நாள்

**பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

## கூறுவிலை கோரல்

மேற்படி சங்கத்தின் உற்பத்தி நிலையக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான கட்டட நிர்மாணதாரர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

கூறுவிலை கோரல் படிவங்களை A-32 வீதி, மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி எனும் முகவரியில் (பூநகரி பிரதேச செயலகம் எதிரில்) அமைந்துள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் 23.01.2015 தொடக்கம் 07.02.2015 ஆம் திகதிக்கிடையில் அலுவலக நாட்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 0217912725 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்.

**பொது முகாமையாளர்**
**பூநகரி பனை தென்னை வள**
**அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.** (C/3999)


## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | FRIDAY |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | I.T.Com |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வாழும் கலைஞர்கள் |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | சுப்பர் திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேச தமிழா |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## கல்வி வலயம் பாராட்டு

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் இந்த வருடத்திற்கான இல்ல மெய்வல்லுநர் போட்டிகளை சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம் நேற்று முதலாவதாக நடாத்தி வலயத்தின் பாராட்டை பெற்றுள்ளது.

பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் வழமையாக முதலாம் தவணையின் இறுதிக்குள்தான் நடாத்தி முடிப்பது வழககம். ஆனால் மேற்படி பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் கடந்த டிசம்பர் விடுமுறை காலத்தில் மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சிகளை வழங்கி 2015 இன் முதலாம் தவணை ஆரம்பத்திலேயே இப்போட்டிகளை நடாத்தியுள்ளனர்.

இந்த முன்னேற்பாடான, முன்மாதிரியான செயற்பாடு ஏனைய பாடசாலை அதிபர்களுக்கு ஓர் முன்னுதாரணமான செயற்பாடாகவும் அமைந்துள்ளதாக கல்விச் சமூகம் பாராட்டியுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி றிஷா தனஞ்சயனின் சிறந்த தலைமைத்துவம் காரணமாகவே இப்போட்டிகளை நடாத்த முடிந்துள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். (06)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

**சீட்டிழுப்பு இல. 2598 திகதி 14-01-2015**

ஆங்கில எழுத்து: **R**

வெற்றி எண்கள்: **12 15 16 64**

போனஸ் இல: **38**

ஜக்பொட் பரிசு ரூ.**27,462,500/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 206836 | 20/- | 4,136,720/- |
| 2 இல | 14778 | 100/- | 1,477,800/- |
| 3 இல | 321 | 1,000/- | 321,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8177 | 40/- | 327,080/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 599 | 1,000/- | 599,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 27,462,500/- | - |
| 1 இல + போனஸ் இல | 9871 | 100/- | 987,100/- |
| 2 இல + போனஸ் இல | 449 | 500/- | 224,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 424 | 200/- | 84,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 241495 | | 10,719,500/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2015.01.17 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு **ரூ. 28,026,650/-**

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொ.பே: 2333546/7 (C/3978)


# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from Qualified persons for the under mentioned posts.

### FACULTY OF SCIENCE

senior Professor / Professor in **Physics/ Chemistry (Physical/Organic/Inorganic) / Botany / Marine Biology / Computer Science**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in **Physics /Statistics/Zoology**

Asst. Network Manager Gr.II in Computer Centre

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.67100 – 11x1425 –82775/- p.m |
| Professor | Rs.56505 – 33x1310 – 73535/-p.m |
| Senior Lecturer Gr.I | Rs.45545 – 7x1050 – 52895/-p.m |
| senior Lecturer Gr.II | Rs.39755 – 11x790 – 48445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27775 – 10x645 – 34225/-p.m |
| Asst. Net Work Manager Gr.II | Rs.26.020-3x645-27.955(EB) 28.600-14x645-37.630/-p.m |

**Note:**

In addition to the above salary, the following allowances will also be paid:

i) Academic allowance - Senior Professor/professor -90% of the basic salary
senior Lecturer Gr.I/Gr.II - 85% of the basic salary
Lecturer (Probationary) - 65 % of the basic salary

ii) Special allowance -20% of the basic salary

iii) Additional monthly allowance - 20% of the basic salary

iv) Cost of living allowance of Rs7,800/-p.m.

v) Interim Allowance Rs.3000 p.m.

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

**Statutory benefits:**

i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above

ii) Membership in Universities Provident Fund and Pension Schema in the University system

iii) Gratuity payments

iv) Employees' Trust Fund benefits

v) Free Medical Services

**Closing date:**

Post of Senior Professor/Professor - 30.04.2015
Other posts - 16.03.2015

Applications and other required documents *for* the Post of Senior professor/Professor shall be sent to 'the Vice. -Chancellor with a covering letter. Applications for the other posts shall be. sent to the Deputy 49istrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope 23X10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.** jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for 45.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**
**22.01.2015**

(C/3998)

# உவர் தடுப்பணை அமைப்பது குறித்து பூநகரி பிரதேச செயலகத்தில் ஆராய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி தெற்குப்பகுதியில் உவர் தடுப்பணை அமைப்பது தொடர்பாகவும் அதன் மூலமான சாதக, பாதக விடயங்கள் தொடர்பிலும் வரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடல் பூநகரி பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் நோர்வே மற்றும் கனேடிய தேசிய அபிவிருத்தி நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் யு.என்.டி.பி. நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தில் கனேடிய தேசிய அபிவிருத்தி நிறுவன கொழும்புப் பிரதி நிதியான ஜெனிபா லலோடி, யு.என்.டி.பி. பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அத்துடன் பூநகரி தெற்கில் குமுழமுனை, கரியாலைநாகபடுவான், கிராஞ்சி, பல்லவராயன் கட்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 6000 ஏக்கர் வரையான வயல் மற்றும் மேட்டு நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளன. பூநகரி தெற்கு கடலின் நொச்சிமுனை ஆறு வழியாக நுழையும் கடல் நீர் மேற்படி கிராமங்களின் நிலங்களை உவர் நிலமாக மாற்றியுள்ளது. சம்புவெளி தொடக்கம் குமுழமுனை வரையான மூன்று கிலோமீற்றர் மேலான உவர் தடுப்பணை அமைப்பதன் மூலம் உவர் நிலங்கள் நல்ல நிலையை அடையக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

இவ் உவர்தடுப்பணை அமைப்பது தொடர்பான விடயங்கள் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டன. 56 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இவ் உவர்தடுப்பணை அமைப்பதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளது. இவ் உவர் தடுப்பணை அமைப்பதன் மூலம் முழுமையாக உவரடைந்துள்ள பல்லவராயன்கட்டு கிராமம் மீளவும் பழையநிலைமைக்கு மாறுவதுடன் உவர் அடைந்துள்ள வயல் நிலங்கள் இரண்டு மூன்றாண்டுகளில் பழைய நிலைமைக்குத் திரும்பும். நீண்டகாலமாக மேற்படி உவர்நீர்த்தடுப்பணை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் தற்போதுதான் அது கைகூடியுள்ளதாகவும் பூநகரி பிரதேச செயலர் தெரிவித்தார். அத்துடன் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட அதிகாரிகள் மேற்படி கிராமங்களின் விவசாயப் பிரதிநிதிகளிடம் கருத்துக்களையும் கேட்டறிந்தனர். பூநகரி தெற்கிற்கான உவர்த்தடுப்பணை அமைப்பது தொடர்பான முதலாவது கூட்டம் கடந்தாண்டு கிளிநொச்சி அரச அதிபர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றதாகவும் பூநகரி பிரதேச செயலர் தெரிவித்தார். (160)

# இலங்கை மீனவர்கள் 10 பேர் விருதலை

இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, இந்திய நீதிமன்ற உத்தரவின் பேரில் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 10 பேர் காங்கேசன்துறை துறை முகம் வழியாக நேற்றுமுன்தினம் வந்தடைந்தனர்.

இலங்கை கடற்படையினரின் உதவியுடன் இலங்கைக்கு வந்த மாத்தறையைச் சேர்ந்த 10 மீனவர்களும் அவர்களது 2 படகுகளும் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் ரமேஸ் கண்ணா தெரிவித்துள்ளார்.

இந்த மீனவர்களை அவர்களின் படகுகளில் கடல் மார்க்கமாக நேற்றுமுன்தினம் மாலை மாத்தறைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லெண்ண உறவின் அடிப்படையில் இந்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுச்சபைக்கூட்டம்

புலோலி ப.நோ.கூ.சங்கத்தின் இரு கிளைகளின் கிளைக்குழு உறுப்பினர் தெரிவிற்கான பொதுச்சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புலோலி தெற்கு (கிளை இல.01, புலோலி கிழக்கு மத்தி, கிளை இல.11) ஆகிய இரு கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர் தெரிவிற்கான கூட்டங்களே புலோலி மெ.மி.த.க.பாடசாலை, புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை மண்டபங்களிலேயே இக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன. புலோலி ப.நோ.கூ.சங்கத்தின் ஏனைய 11 கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவுக்கான பொதுக்கூட்டங்கள் நடைபெற்று கிளைக்குழு உறுப்பினர்கள் ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (01)

# பொதுக்கூட்டம்

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க விசேட பொதுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு புலோலி ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் எம்.ஜெகதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விசேட பொதுக்கூட்டத்திலே யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (01)



காரைநகர் யா/யாழ்ரன் கல்லூரி கனிஷ்ட பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கால்கோள் விழாவில் இரண்டாம் தர மாணவர்கள், முதலாம் தரத்தில் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்பதையும், பாடசாலை மாணவன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பதையும் காணலாம். (50)

# கிழக்கு மாகாணசபை தமிழ் - முஸ்லிம் பிணக்கில் வெளியாவதும் இனவாதமே!

தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான ஒற்றுமையை, இணைந்த வாழ்வை விரும்பாத சக்திகள் 'பொது அரசியல் அபிலாசைகள் ஒன்றாகச் சந்திக்கும் புள்ளியை' தகர்க்கவே விரும்புவர். நிச்சயமாக இலங்கையின் சிங்கள மைய அரசு ஒருபோதுமே இந்த இணைவின் புள்ளி தொடர்வதற்கும், இரு இனங்களுக்கும் இடையே அரசியல், சமூக ஐக்கியம் வளர்வதற்கும் வாய்ப்பளிக்காது என்பது நிச்சயம்.

மிக வெளிப்படையாகச் சொல்லப்போனால், தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகள் இணைந்த பின்புலத்தில் தனது அதிகாரத்தினை பெற்றுக்கொண்ட மைத்திரி, ரணில் கூட்டு, அதிகாரத்தினை கைப்பற்றிய பின்னான சூழலில் இதனை அனுமதிக்காது. இலங்கையின் இன முரண்பாட்டின் அரசியலை ஆழ விளங்கிக் கொண்டோருக்கு இது இலகுவில் புரியும் உண்மையாகும்.

அதேபோல் தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான ஒற்றுமையை, இணைந்த வாழ்வை விரும்பாத சக்திகள் தமிழருக்குள்ளும் முஸ்லிம்களுக்குள்ளும் இருக்கின்றனர். அவர்களுடன் இரு தரப்பினையும் சார்ந்த அரசியல் தலைவர்களும் பிரதிநிதிகளும் உள்ளனர். இவர்கள் மைய அரசின் நிகழ்ச்சி நிரலுக்குள் போவதற்கும் தமது தனிப்பட்ட நிலைப்பாடுகளுக்காகவும் இந்த இணைவை முரண்பாடாக மாற்றுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

இதன் முக்கிய ஒரு களமாகவே கிழக்கு மாகாணசபை விவகாரம் சமகாலத்தில் மாறி இருக்கிறது. தமிழ், முஸ்லிம் மக்களிடையே முரண்பாட்டினை, அதிகார மோதலை தோற்றுவிக்கும் களமாக விரிகிறது. இது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஒரு ஆபத்தான சூழலை தோற்றுவிப்பதுடன் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமையை நிலை நாட்டுவதற்கான பலத்தினையும் சிதைத்தழிக்க முற்படுகிறது.

கிழக்கு மாகாண சபையில் யார் ஆட்சியமைப்பது? யார் முதலமைச்சர் என்கிற அதிகார மோதல் எழுந்துள்ளது. தமிழர்தான் முதலமைச்சராக வர வேண்டும் என்கிற கோரிக்கையை ஒரு பிரிவினரும், முஸ்லிம்தான் முதலமைச்சராக வர வேண்டும் என்கிற கோரிக்கையில் இன்னொரு பிரிவினரும் தமது அரசியல், அறிக்கைப் போரில் குதித்துள்ளனர்.

இந்த அரசியல் பிற்போக்குவாதத்திற்கு இனவாதம் ஆகுதியாக வார்க்கப்படுகிறது. முரண்பாடுகள் கூர்மையாக்கப்படுகின்றன. நேர்மறையான பார்வைக்குப் பதிலாக எதிர்மறையான பார்வை விதைக்கப்படுகிறது.

கடந்த ஒரு வாரகாலத்திற்கு மேலாக, இந்த விவகாரத்தில் நேரடியாக சம்பந்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் மூன்றுக்கும் மேற்பட்ட சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியும் அவர்களுக்குள் ஒரு பொது இணக்கத்திற்கு வர முடியவில்லை என சொல்லப்படுகிறது. இந்த நிலையில் கிழக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் பல காய் நகர்த்தல்கள் மறைமுகமாக நடந்து வருகிறது. இது தமிழ் முஸ்லிம் மக்களின் ஐக்கிய வாழ்வில் ஆபத்தான ஒரு கட்டத்திற்கு வழி வகுக்கலாம் என நான் அஞ்சுகிறேன்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் தமிழ், முஸ்லிம் சிவில் சமூகம் இந்த விவகாரத்தில் பார்வையாளர் என்கிற நிலையைத் தாண்டி பங்காளிப்பாளர்களாக மாற வேண்டிய உடனடித் தேவை எழுந்துள்ளது. சமகாலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசையும் நோக்கிய அரசியல் அழுத்தம் அவசியமாகிறது.

* இரு கட்சிகளிடையேயும் இதுவரை பேசப்பட்ட விடயங்களை தமிழ், முஸ்லிம் மக்களுக்கு முன் பகிரங்கப்படுத்துதல் வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கோரிக்கை, நிலைப்பாடுகள் என்ன என்பதையும், முஸ்லிம் காங்கிரஸ் தனது கோரிக்கை, நிலைப்பாடுகள் என்ன என்பதையும் பொது வெளியில் பகிரங்கப்படுத்துதல் வேண்டும்.

* தமிழ், முஸ்லிம் சிவில் சமூகம் கூட்டாக இணைந்து இந்த விவகாரத்தில் காய்தல் உவத்தலின்றி நடுநிலையாக உடனடித் தலையீடு செய்தல் வேண்டும்.

ஏனெனில் இதன் முக்கியத்துவமானது இரு கட்சிகளுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல, முழு தமிழ், முஸ்லிம் மக்களின் இணைந்த வாழ்வுடனும் அரசியல் உரிமை விவகாரத்துடனும் எதிர்கால வாழ்வியலுடனும் தொடர்புபட்டது.

கிழக்கு மாகாணம் தான் தமிழ், முஸ்லிம் மக்களிடையேயான உறவுக்கும், முரணுக்குமுரிய பூமியாக உள்ளது. ஆகவே அரசியல் தலைமைகளிடம் மட்டுமே மக்களின் வாழ்வை ஒப்படைக்காதீர்கள்.

- எம்.பௌசர் -

வெற்றி என்பது நிரந்தரமல்ல; தோல்வி என்பது இறுதியானதுமல்ல - பில் கேட்ஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## 'அதிகாரமில்லாத' பதவி எதுக்கு?

கிழக்கு முதலமைச்சர் பதவியினை தமக்கு விட்டுத்தருமாறும் புதிய ஆட்சி அமைவதிலுள்ள சிக்கல் நிலைமையினை தீர்த்து வைக்குமாறும் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றைய தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இச்சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்றுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களான இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரே ஜனாதிபதியுடனான இம்முக்கிய சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக தமிழர் ஒருவர் வருவதற்கான காரணங்களை எடுத்துரைத்த கூட்டமைப்பினரின் கருத்துக்களை நிதானமாகச் செவிமடுத்த பின், "தங்களது நியாயமான கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் நான் பொதுவாக மாகாணசபை விடயங்களில் தலையிடுவதில்லையென எண்ணியிருக்கிறேன்" என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சங்கடம் புரிந்துகொள்ளத் தக்கதே. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் என்பதுபோல, இந்த கிழக்கு முதலமைச்சர் பதவியையும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கோ அல்லது முஸ்லிம் காங்கிரசுக்கோ யாருக்கு விட்டுத்தந்தாலும் மறுதரப்பின் பகையைச் சம்பாதிக்க நேரும் என்பது அவருக்குத் தெரியும்.

வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் எவரது ஆதரவை இழப்பது என்ற குழப்பம் அவருக்கு இருக்கும். ஏற்கனவே சிறுபான்மை இனங்களுக்கு தாராளமாக அமைச்சுப் பதவிகளை வழங்கி அவர்களை வளைத்துக் கொண்டிருக்கிறார் பிரதமர் ரணில்.

வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலைக் குறிவைத்து காய்களை மிகத் தந்திரமாக நகர்த்தி வருகிறார் ரணில் விக்கிரமசிங்க. அமைச்சுப் பதவிகளை எல்லாம் தனது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் ஆதரவுக் கட்சிகளுக்கும் வழங்கி, நாட்டின் நிர்வாகத்தை மெல்ல மெல்லத் தன் கைக்குள் எடுத்துக் கொள்கிறார் பிரதமர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான பிறகு, இதுகுறித்து அவரது கட்சியினரால் விமர்சிக்கப்பட்டு வருகிறார். ஜனாதிபதித் தேர்தலுக்காக இணைந்து செயற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியை மிகக் குறுகிய காலத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட வேண்டிய கட்டாயம் ஜனாதிபதி தலைமையிலுள்ள கட்சிக்கு ஏற்பட்டிருப்பது துரதிர்ஷ்டமானதுதான்.

தேர்தலில் வெல்லுவதற்கு சிறுபான்மை இன வாக்குகள் முக்கியம் என்ற நிலைமையில், தமிழ் கூட்டமைப்பையோ முஸ்லிம் காங்கிரசையோ பகைத்துக்கொள்ள வேண்டிய ஒரு முடிவைச் சொல்வதிலிருந்து தவிர்த்துக்கொள்ள ஜனாதிபதி முயற்சிப்பது தெரிகிறது.

அவை ஒருபுறமிருக்கட்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் தமது பதவிகள் வாய்ப்புகளுக்காகத்தான் அரசதரப்பைச் சந்திப்பதும் பேசுவதுமாக இருக்கிறார்களே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்வதற்கு வேண்டிய இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பேசுவதாகவோ முயற்சிகள் எடுப்பதாகவோ செய்திகள் வரக் காணோம்.

தீர்வைக் கொண்டுவர முயற்சி செய்யாமல் அல்லது அதிகாரம் எதுவும் இல்லை என்று இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் மாகாண சபைக்கான அதிகாரங்களை எடுப்பதற்கு முயற்சி செய்யாமல், அதையெல்லாம் விட்டுவிட்டு மாகாணசபை முதலமைச்சுப் பதவிகளையும் அமைச்சுப் பதவிகளையும் எடுப்பதற்கு ஏன் மினக்கெட்டுக் கொண்டிருக்கிறார்கள்?

அந்தப் பதவிகளை எடுத்த பிறகும் "எதுவும் செய்ய அதிகாரம் ஒண்டுமில்லை" என்றுதானே சொல்லிக் கொண்டிருக்கப் போகிறார்கள்? அந்தப் பதவிகளை எடுப்பதற்கு ஏன் ஆலாய்ப் பறக்க வேண்டும்? 2015-ல் தீர்வைக் கொண்டுவருவதற்கல்லவா இவர்கள் பேசவேண்டும்!

- ஆசிரியர்

# இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள்குடியேற்ற வேண்டும்

## ஜே.வி.பி.தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களின் இதய வலிக்கு மருந்து கொடுக்கவில்லை என்றால் தேசியப் பிரச்சினை ஒரு போதும் தீராது இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜே.வி.பி. தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இதனை தெரிவித்திருந்தார்.

வடக்கு மக்களின் நிலங்களை இராணுவத்தினர் கைப்பற்றி அந்த இடங்களில் விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைக்குக் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இவர்களுக்கு விவசாயக் காணிகளை கொள்வனவு செய்வதற்கான செலவு இல்லை. விவசாய செய்கைக்கான செலவினை அரசாங்கம் வழங்குகின்றது.

அரசாங்க வாகனங்கள் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இராணுவம் ஹொட்டல்களைக் கட்டுவதற்கு யார் அதிகாரம் கொடுத்தது? இது மக்களை மேலும் கஷ்டத்தில் தள்ளுவதாகும்.

ஆகவே பாதுகாப்புக்குத் தேவையான நிலங்களை வைத்துக் கொண்டு மற்றைய இடங்களை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இவர்கள் அரசியல் பலத்திற்காக அரசியல் செய்கின்றார்கள்.

யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்கள் ஆகின்றன. ஒரு இலட்சத்திற்கு மேலான மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது வேறு இடங்களில் கஷ்டப்படுகின்றனர். இவை குறித்து சர்வதேசத்துடன் கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்க வேண்டும்.

பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியது இலங்கையில் தான். இந்த மக்களின் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வரவில்லை என்றால், அவர்களின் இதயத்தின் வலிக்கு மருந்து கொடுக்கவில்லை என்றால் இந்தப் பிரச்சினை ஒரு நாளும் தீராது.

இதற்கு ஒரே தீர்வு பாதுகாப்புக்குரிய பகுதிகளில் மட்டும் இராணுவத்தினரை வைத்துக் கொண்டு ஏனைய பகுதிகளில் இருந்து அகற்றிவிடுவதே சிறந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாதசாரி கடவையில் அலட்சியம் மோட்டார்சைக்கிள் சாரதிக்கு அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரப் பகுதியிலுள்ள பாதசாரிகள கடவையில, பாதசாரிகள் கடந்து சென்றதை அலட்சியம் செய்து மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நபருக்கு 3,000 ரூபா அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன், உத்தரவிட்டார்.

குறித்த நபரை கடந்த 2ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து, பொலிஸ் பிணையில் விடுவித்ததுடன் அவருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு, கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து நீதவான் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை, துவிச்சக்கரவண்டியில் சென்ற குடும்ப உறுப்பினர்களை மோதித்தள்ளிய மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கு 4,500 ரூபா அபராதம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார். கடந்த 3ஆம திகதி கிளிநொச்சி நகரப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூவர் சிறுகாயங்களுக்குள்ளாகியிருந்தனர். மோதிய நபர், கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

# பயன்படுத்த முடியாத நிலையில் ஓமந்தை நெல்களஞ்சியசாலை

(வவுனியா)

வவுனியா, ஓமந்தை பகுதியில அமைந்துள்ள நெல் களஞ்சியசாலை கட்டடத்தை பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் மாற்றி அமைத்து தருமாறு ஓமந்தை விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஓமந்தை பகுதியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக பல இலட்சம் ரூபா செலவில் வவுனியா பலநோக்குக கூட்டுறவுச் சங்கத்திற்கு கீழ் நெல் களஞ்சியசாலைக்காக மூன்று கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டன. இக் களஞ்சியசாலையுடன் இணைந்ததாக நெல் குற்றும் ஆலை ஒன்றினையும் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

இந் நிலையில் அக் கட்டடங்கள் தற்போது கவனிப்பாரற்ற நிலையில் பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றன.

இந்த நிலையில் இக் கட்டடத்தின் நிலை குறித்து ஓமந்தை கமக்கார அமைப்பு தலைவரும் வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுச் சபை உறுப்பினருமான க.அமிர்தலிங்கம் தெரிவிக்கையில்,

பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான இக் கட்டடத்தில் வருடா வருடம் அரசின் நிதி உதவியுடன் நெல்லை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி விற்பனை செய்து வந்தோம். ஆனால் தற்போது இக் கட்டடம் காடாகக் காணப்படுகின்றது.

நெல் அறுவடை தொடங்கியுள்ளதால் இதனை துப்புரவு செய்து விவசாயிகள் தொடர்ந்தும் பயன்பெறக் கூடிய வகையில் சீர்செய்து தரவேண்டும் என கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளார் மற்றும் சங்கத்தின் தலைவரிடம் கேட்டுகொள்கின்றேன் என தெரிவித்தார்.

இதேவேளை இக் களஞ்சியசாலையில் நெல் காயவிடும் தளம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அத்தளம் பயன்படுத்தப்படாத நிலையில் மாடுகள் தங்குமிடமாகவும் மாறியிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இக் கட்டடத்தில் நெல் அரைக்கும் ஆலையையும் அமைத்து தரும் பட்சத்தில் விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட வவுனியா மக்களுக்கு மிகப்பயனுள்ளதாக அமையும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# பழைய விலையில் விற்பனை எரிபொருள் நிரப்பு நிலையம் முற்றுகை

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை பொதுமக்கள் முற்றுகையிட்டதால் அங்கு சில மணிநேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட எரிபொருள் குறைப்புக்கமைய, ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 117 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் காத்தான்குடி - ஆரையம்பதி எல்லையில் அமைந்துள்ள இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுக் காலை எரிபொருள் நிரப்பிய பலரிடம் பழைய விலை அறவிடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதனால் அவர்கள் மீதி பணத்தைத் தருமாறு வலியுறுத்தி போராட்டம் நடாத்தினர். இதனையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.வெதகெதர தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தினரால் குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகத்தின்மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. மேலும் சம்பந்தப்பட்ட பெற்றோல் நிலையத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# சொந்த நலன்களுக்காக அரசியல் செய்வோரை மக்கள் தோற்கடிப்பர்!

**இலங்கை** ஜனாதிபதி தேர்தல் எதிர்பார்த்ததை விட அமைதியான முறையிலும், தேர்தலின் பின்னரான அதிகார கையளிப்பும் சுமுகமாக நடந்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் பெரும் தேர்தல் மோசடிகளில் ஈடுபடுவதற்கும், வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதற்கும் திட்டமிட்டுள்ளதாக தேர்தலுக்கு முன்பும், அதையும் மீறி எதிரணி வெற்றி பெற்றால் இராணுவத்தின் உதவியுடன் ஆட்சியில் தொடர்வதற்கு மகிந்த திட்டமிட்டிருந்ததாகவும் தேர்தலுக்கு பின்பும் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன.



இப்படியான ஒரு தோற்றப்பாட்டை முக்கியமாக அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் போன்றன ஏற்படுத்துகின்றன. ஆனால் தேர்தலை பெரிய மோசடிகளற்று நடாத்தி முடித்ததுடன், தேர்தல் பெறுபேறுகள் முற்றாக வெளிவருவதற்கு முன்னரே தோல்வியை ஏற்று, அதிகாரத்தை கையளித்துவிட்டு, அலரி மாளிகையை விட்டும் வெளியேறிச் சென்றுள்ளார் முன்னாள் ஜனாதிபதி.

அத்துடன் கடந்த 10 வருடங்களாக சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக் இருந்த தனது தலைமைப் பதவியை ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்துள்ளார்.

மகிந்த ராஜபக்சவை ஆட்சியை விட்டு அகற்ற வேண்டும் என்ற முடிவை வெளிநாட்டு சக்திகள் எடுத்தமைக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, அவரது அரசு பின்பற்றிய உலக வல்லாதிக்க எதிர்ப்பு வெளிநாட்டு கொள்கையே.

ஒரு புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகளை கணிப்பிட ஒரு சில நாட்கள் போதாது என்பது உண்மையென்ற போதிலும், புதிய ஜனாதிபதியின் பின்னால் அணிதிரண்டு நிற்கும் உள்நாட்டு - வெளிநாட்டு சக்திகள் யார் யார் என்பதை வைத்து அது எந்தப் பாதையில் செல்லப் போகின்றது என்பதை அனுமானிப்பது ஒன்றும் சிரமமான விடயமல்ல. வெளிநாட்டு வல்லாதிக்க சக்திகள் பெரும் பிரயத்தனப்பட்டு இந்த ஆட்சி மாற்றத்தை கொண்டு வந்தமை பொழுதுபோக்கு வேடிக்கைக்காக அல்ல.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் உரிமைகளுக்கென போராட்டங்கள் நடாத்துவதும், ஐ.தே.க ஆட்சிக்கு வந்தால் அரசில் இணைவதுமான கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றி வரும் தமிழ் தலைமைகளின் கபடத்தனமான போக்குகளையிட்டு இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னும் ஒன்றையும் ஞாபகப்படுத்துவது அவசியம்.

1965இலும் "தேசிய அரசாங்கம்" என்ற போர்வையில் டட்லி சேனநாயக்கவின் ஐ.தேக. அரசில் ஏழு கட்சிகள் கூட்டுச் சேர்ந்தன. அவற்றில் தமிழ் இனவாதம் பேசிய தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் மறுபக்கத்தில் தீவிர சிங்கள இனவாதம் பேசிய கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க போன்றோரும் அடங்கியிருந்தனர். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக மாவட்ட சபைகள் அமைப்பதாக டட்லி தமிழரசு கட்சியினருடன் ஒப்பந்தம் செய்திருந்தார்.

ஆனால் இறுதியில் எதுவுமே வழங்கப்படவில்லை. நாலரை வருடம் ஆட்சியில் ஒட்டிக்கொண்டு இருந்துவிட்டு 1970 தேர்தல் நெருங்கும் சமயத்தில் ஆட்சியை விட்டு வெளியேறி தமிழரசு தலைமை தமிழ் மக்களை ஏமாற்ற முனைந்தது. ஆனால் மக்கள் அவர்களது ஏமாற்றுக்கு எடுபடாமல் 1970ஆம் ஆண்டு தேர்தலில் அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டினர்.

அந்த தேர்தலில் அ.அமிர்தலிங்கம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், மு.சிவசிதம்பரம், ஈ.எம்.வி.நாகநாதன், மு.ஆலாலசுந்தரம் ஆகிய தமிழரசு - தமிழ் காங்கிரஸ் தலைவர்களை மக்கள் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். இப்பொழுதும் தமிழ் மக்களின் நலன்களை அடகு வைத்து தமது சொந்த நலன்களுக்காக எதிரணி வேட்பாளரை ஆதரித்த தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு அதே வகையான பாடம் ஒன்றை புகட்டுவர் என எதிர்பார்க்கலாம். ●

வானவில் 49 இதழ் கட்டுரையிலிருந்து

# நாட்டின் அரசியலிலிருந்து ராஜபக்சாக்களை முற்றாக அகற்றுவதற்கும், ஜனநாயக ஆட்சி இடம்பெறுவதற்கும் அமெரிக்கா தனது பங்களிப்பை வழங்க வேண்டும்

- New York Times-இல் RYAN GOODMAN எழுதியுள்ள கட்டுரையிலிருந்து



**இன்றைய** சூழலில் அமெரிக்க அரசாங்கம் எவ்வாறு சிறிலங்கா விடயத்தில் ஒரு உறுதியான பங்களிப்பை வழங்க முடியும் என்பதை ஆராயலாம். சிறிலங்காவின் பழைய பாதுகாப்புச் செயலரான கோத்தபாய ராஜபக்ஷ இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சிறிலங்கா இராணுவத்தை வழிப்படுத்தினார். இவர் ஒரு அமெரிக்கா குடிமகனாவார். இவர் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலசில் வசித்த போது லோயொலா சட்டக் கல்லூரியில் கணனி இயக்குநராகச் செயற்பட்டார்.

அமெரிக்காவின் குடிமகன் என்ற வகையில் 1996 போர்க் குற்றச் சட்டத்தின் கீழ் இவர் உலகின் எந்தவொரு நாட்டிலும் வைத்து அமெரிக்க நீதிமன்றங்களின் சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி கைதுசெய்யப்பட முடியும். மறுவழியில் பார்த்தால், திரு.ராஜபக்ச விடயத்தில் அமெரிக்கா மிகப் பொருத்தமான நியாயப்படுத்தலை தனிப்பட்ட ரீதியாக மேற்கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ச அவரது சகோதரனை விட சிறிலங்காவில் ஒரு சுமுகமான அரசியல் மாற்றம் ஒன்று நிகழ்வதற்குத் தடையாக இருப்பதாக சுயாதீன அவதானிப்பாளர்கள் நீண்டகாலமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

திரு.ராஜபக்ச மீண்டும் ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதன் மூலம் சிறிலங்காவின் புதிய அரசாங்கமானது தனது ஜனநாயக வெற்றியைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தயார்ப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும். கோத்தபாயவின் சகோதரரான மகிந்த சிறிலங்காவின் பலம்மிக்க எதிர்க்கட்சியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் வெற்றி பெற்றால் இது சாத்தியமாகலாம். ஆகவே இதனைத் தவிர்ப்பதற்கு திரு.ராஜபக்ச அரசியலிலிருந்து முற்றிலும் ஓரங்கட்டப்படுதல் தற்போது மிகவும் முக்கியமானதாகும்.

தனது நாட்டில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வெளிநாட்டுத் தலையீடுகள் இன்றி உளநாட்டு குற்றவியல் நடைமுறைகளை முன்னெடுப்பதற்கான சமிக்ஞைகளை சிறிலங்காவின் புதிய அதிபர் திரு. சிறிசேன காண்பித்துள்ளார்.

ஆனால் திரு.ராஜபக்சவுக்கு எதிராக சிறிலங்காவின் தற்போதைய புதிய அரசாங்கம் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இது அரசியல் ரீதியான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். இதில் திரு.ராஜபக்சவுக்கு எதிரான விசாரணைக்கு அமெரிக்கா சிறிசேன அரசுக்கு நல்லெண்ண சமிக்ஞையை வெளியிடுவதன் மூலம் இந்த விடயத்திற்கு அமெரிக்கா உதவமுடியும்.

அமெரிக்காவின் இத்தகைய நகர்வானது சிறிலங்காவின் புதிய அரசாங்கம் தனது நாடு மீது ஏற்பட்டுள்ள கறையைக் களைவதற்கான ஒரு வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் இதனை நியாயப்படுத்துவதற்குமான வழியை ஏற்படுத்தும். ஏனெனில் திரு. ராஜபக்ச அமெரிக்காவின் குடியுரிமையைப் பெற்றுள்ளதால் அமெரிக்கா கோத்தபாய ராஜபக்சவின் விடயத்தில் நேரடியாகத் தலையீடு செய்யும் போது இது வேறொரு நாட்டின் குடிமகனின் விவகாரத்தில் தலையீடு செய்கின்றது என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகாமல் இருக்க முடியும்.

சிறிலங்காவின் புதிய அரசாங்கம் தனது ஆட்சியை நடாத்துவதற்கான ஒத்துழைப்பை முதலில் வழங்கியதன் பின்னர் தனது குற்றவியல் விசாரணையை மேற்கொள்வதா அல்லது இல்லையா என்பதை அமெரிக்கா தீர்மானிக்கும் என ஒபாமா நிர்வாகம் வெளிப்படையாகத் தெரிவிக்க முடியும்.

அமெரிக்கா இவ்வாறான சமிக்ஞைகளை வழங்குவதன் மூலம் நாட்டின் அரசியலிலிருந்து ராஜபக்சாக்களை முற்றிலும் ஓரங்கட்டுவதற்கு உதவமுடியும். சிறிலங்காவில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொறுப்பளிப்பதற்கும் சிறிலங்காவில் ஜனநாயக ஆட்சி இடம்பெறுவதற்கும் அமெரிக்கா தனது பங்களிப்பை வழங்க வேண்டும். ●

# 'ஒப்பரேசன் ராஜபக்ஷ' முடிந்து விட்டது... அது ஒரு தற்காலிக மகிழ்ச்சியைத் தரலாம்... ஆனால், அது தமிழர் அரசியலில் என்ன விளைவுகளை உண்டுபண்ணும்..?

**ராஜபக்ஷவை** அதிகாரத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கான "ஒப்பரேசன் ராஜபக்ஷ" வெற்றிகரமாக முடிவுற்றது. ஆனால், அந்த வெற்றி இன்னமும் முழுமையடையவில்லை என்பதே தற்போது வெளித்தெரியும் புதிய பிரச்சினையாகும். ஏனெனில், நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள், எதிர்பார்த்தது போன்று திருப்திகரமாக அமையவில்லை.

காரணம், பெரும்பான்மையான சிங்கள மக்கள் ராஜபக்ஷவையே ஆதரித்திருக்கின்றனர். ராஜபக்ஷவையே தங்களின் தலைவராக அங்கீகரித்திருக்கின்றனர். இது ஆட்சி மாற்றத்தில் விருப்பம் கொண்டிருந்த சக்திகளுக்கு நல்லதொரு சகுனமல்ல.

ஆனால், இரகசிய சமூகம் ராஜபக்ஷவை அவ்வளவு எளிதாக மேலெழ விடாது.

ஆனால், இங்கு தமிழர்கள் உற்றுநோக்க வேண்டியது வேறு விடயமாகும். ராஜபக்ஷ விழுகிறார் அல்லது எழுகிறார் என்பதை ஒரு புறமாக வைத்துவிட்டு, நடந்து முடிந்த தேர்தல் முடிவு சொல்லியிருக்கும் உண்மையையே உற்று நோக்க வேண்டும். அதாவது, ராஜபக்ஷவின் அதிகார வீழ்ச்சி என்பது சிங்கள இனவாதத்தின் வீழ்ச்சியல்ல என்பதாகும். அது எதிர்காலத்தில் மேலும் எழுச்சியடையவும் அதிக சாத்தியப்பாடுகள் உண்டு.

தமிழர் பிரச்சினைக்கு உறுதியானதொரு அரசியல் தீர்வை கோரும் போது, சிங்கள இனவாதம் விழவில்லை என்னும் உண்மை நிச்சயம் வெளிப்படும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், நடந்துமுடிந்த தேர்தலை அவர்கள் ஒரு பழிதீர்ப்பதற்கான வாய்ப்பாக மட்டுமே பயன்படுத்திக் கொண்டனர். 2005இல் தேர்தலை பகிஷ்கரித்து தமிழ் மக்கள் எந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு காரணமாக இருந்தனரோ, அதே ராஜபக்ஷவை 2014இல் வாக்களித்து அதிகாரத் திலிருந்து அகற்றவும் காரணமாகியிருக்கின்றனர்.



நடந்து முடிந்த தேர்தலில் தமிழ் மக்கள் மைத்திரியை நிராகரித்திருந்தால், ராஜபக்ஷ வெற்றிபெற்றிருப்பார். இதனை தங்களுக்கு சாதமாக்கிக் கொள்ளும் சிலர் தேர்தல் பகிஷ்கரிப்பை மகிந்தவிற்கு சார்பான ஒன்றாக காட்ட முற்பட்டனர். உண்மையில் மைத்திரியை ஆதரியுங்கள் என்று சொன்னவர்களும் சரி, தேர்தலை பகிஷ்கரியுங்கள் என்று சொன்னவர்களும் சரி, தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டே அதனை குறிப்பிட்டனர். ஆனால், மேற்படி இரண்டும் வேறுபட்ட அணுகுமுறைகளைக் கொண்டவை.

அரசியல் என்பது ஒரு வழிப் பாதையல்ல என்பதை விளங்கிக் கொள்வதிலிருந்தே, அரசியலில் பல்வேறு உபாயங்களை ஒருவர் விளங்கிக் கொள்ள முடியும். ஒன்று பிழைத்தால் அடுத்தது என்ன என்னும் அடிப்படையில்தான் அரசியல் உபாயங்களை வகுக்க வேண்டும். உலகில் ஒவ்வொரு சக்திகளும் அப்படியானதொரு உபாயத்தை முன்னிறுத்தித்தான் தங்களின் நலன்களை வெற்றி கொள்கின்றனர்.

இன்று ஆட்சி மாற்றத்தின் பின்னால் திரண்டிருந்த பல்வேறு சக்திகள் மற்றும் தனிநபர்கள் அனைவரும் தங்களின் நலன்களையும் இணைத்தே விடயத்தை கையில் எடுத்திருந்தனர். அவ்வாறாயின் ஒருவர், தமிழ் மக்களின் நலனை மட்டும் முன்னிறுத்தி சிந்திப்பதில் என்ன தவறு?

யதீந்திரா கட்டுரையிலிருந்து

# இராணுவப் புரட்சிக்கு முயற்சி செய்யப்படவில்லை

## முன்னாள் பாதுகாப்பு செயலாளர் மறுப்பு

தேர்தல் தினத்துக்கு அடுத்த நாள் காலை இராணுவப் புர்ட்சிக்கு முயற்சிக்கப்பட்டதாக வெளியான தகவலை முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

இது அடிப்படையற்ற குற்றச்சாட்டு என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக தேர்தல் ஒன்றின் முடிவுகள் வந்து கொண்டிருக்கையில் இராணுவ் நகர்வு ஒன்றுக்கு முயற்சிக்கபடவில்லை என்று அவர் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலின் இறுதி முடிவு அறிவிக்கப்படும் முன்னரே முன்னாள் ஜனாதிபதி அலரிமாளிகையை விட்டு வெளியேறி விட்டமையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இராணுவப் புரட்சி விடயத்தில் அலரி மாளிகையில் இரகசிய பேச்சுவார்த்தை இடம் பெற்றதாக கூறப்படுவது அடிப்படையற்ற கருத்து என்றும் கோத்தாபய தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

தேர்தல் முடிவுகளையடுத்து, காலையில் அலரி மாளிகையை முற்றுகையிட எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் திட்டமிட்டுள்ளதாக கிடைத்த புலனாய்வு அறிக்கையை அடுத்தே அதிகாலையில் அலரி மாளிகைக்குச் சென்றேன்.

அத்தகைய சூழ்நிலையை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து அங்கு கலந்துரையாடப்பட்டது. சட்டமா அதிபரின் ஆலோசனையும் பெறப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. தாம் உடனடியாக அலரி மாளிகைக்கு வருவதாக அவர் கூறினார்.

அவர் அங்கு வந்ததும், ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார், அதையடுத்து அலரி மாளிகையை விட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியேறுவதாக முடிவு செய்யப்பட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனையவர்களினது பாதுகாப்புக்கு ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார்.

இது தான் தேர்தல் இறுதி முடிவு வெளியாவதற்கு முன்னர் நடந்தது.

நாம் இராணுவப் புரட்சிக்குத் திட்டமிட்டிருந்தால் எதற்காக, சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்க வேண்டும்?

அவர் அரசாங்கத்துக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குபவர் என்றும் தெரிவித்துள்ளார்.

# தனியார் பஸ் கட்டணங்கள் நிச்சயமாக குறைக்கப்படும்



எரிபொருட்களின் விலை குறைக்கப்பட்டதை அடுத்து நிச்சயமாக தனியார் பஸ் கட்டணங்களும் குறைக்கப்படும் என இலங்கை போக்குவரத்து தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன, தெரிவித்தார்.

தனியார் பஸ் கட்டணங்கள் சூத்திரத்தின் அடிப்படையிலேயே குறைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

பஸ் கட்டணங்கள் 2013 ஆம் ஆண்டு அதிகரித்திருந்தது. கடந்த வருடம் இக்கட்டணங்கள் குறைக்கப்பட்டிருக்கவில்லை.

# முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் வெளிநாடு செல்லத்தடை



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நிஹால் ரணசிங்க இதனை அறிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் திணைக்களத்தின் அறிவிப்பின் பிரகாரம் இத்தடை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை மன்றக் கல்லூரிக்கு புதிய தலைவர் நியமனம்



இலங்கை மன்றக்கல்லூரியின் புதிய தலைவராக மலிக் ஜய திலக்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்றுமுன்தினம் முற்பகல் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கை மன்றக்கல்லூரியின் புதிய தலைவரான ரஞ்சித் பண்டார, தகவ்ல் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் கருணாரதன பரணவித்தா்ன, பேராசிரியர் காலோ பொன்சேகா ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக் பட்டதாரியான மலிக் ஜயதிலக்க இந்திய பல்கலைக்கழக முதுமாணி பட்டதாரியும் பிரபல எழுத்தாளருமாவார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் மோசடி

## விசாரிக்க குழு நியமனம்

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முன்னைய ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்வதற்கென 8 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் தலதா அத்து கோரள இந்த விசேட குழுவை நியமித்துள்ளார். இக்குழுவில் 6 சட்டத்தரணிகளும் கணக்காளர் ஒருவரும், கணனி தொழில்நுட்ப நிபுணர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த அரசு காலத்தில் பணியகத்தின் நடவடிக்கைச் செலவாக 150 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிறுவனத்தில் பதவிகள் வழங்கியமை பிரசார நடவடிக்கைகளுக்கான செலவினம் தொடர்பாகவும் விசாரணைகள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இக்குழுவின் விசாரணை அறிக்கைகளை 10 நாட்களில் அமைச்சரிடம் கையளிக்க வேண்டும் எனவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சியை ஏற்படுத்துவதுடன் தேவையற்ற செலவினம் வீண்விரயம் என்பவற்றை இல்லாதொழித்து நஷ்டத்தில் இயங்குவதிலிருந்து நிறுவனங்களை மீட்டு இலாபமீட்டும் நிலைக்கு கொண்டு வருவதே அரசின் நோக்கமாகும்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுச் சென்றுள்ளவர்களுக்கு 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தலதா அத்து கோரள தெரிவித்துள்ளார்.

# காணாமற்போனவர்களில் 2000 பேர் குறித்து விசேட அவதானம்

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளில் 2 ஆயிரம் முறைபாடுகள் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பரணகமவை மேற்கோள்காட்டி இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டதிட்டங்களுடன் சம்பந்தப்பட்ட முறைபாடுகள் தொடர்பிலேயே இவ்வாறு முக்கிய அவதானம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இதற்கான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

இது சார்ந்த நிபுணர்கள் அவசியப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல்வாதிகளுக்கான ஒழுக்கக்கோவை அறிமுகம்

புதிய அரசாங்கம் அரசியல்வாதிகளுக்கு ஒழுக்கக் கோவை ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி இந்த ஒழுக்கக் கோவை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்யப்பட உள்ளது.

பிரதேச சபை உறுப்பினர்கள் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரையில் அரசியல்வாதிகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்த அறிவுறுத்தல்கள் இந்த ஒழுக்கக் கோவையில் உள்ளடக்கப்பட உள்ளது.

நாட்டின் அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறு அரசியல்வாதிகளுக்கான விசேட ஒழுக்கக் கோவையொன்று அறிமுகம் செய்யப்படுவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தேசிய நிறைவேற்றுப் பேரவையின் தீர்மானத்திற்கு அமைய இந்த ஒழுக்கக் கோவை அமுல் படுத்தப்பட உள்ளது. நேற்று முன்தினம் தேசிய நிறைவேற்றுப பேரவை கூடியபோது இந்த ஒழுக்கக் கோவை குறித்த சட்ட வரைவினை உருவாக்கும் பொறுப்பு ஜே.வி.பி. தலைவர் அனுரகுமாரவிடம் ஒப்படைக்கப்பட்டது.

மந்திரி என அழைக்கப்படும் நபர் இந்த ஒழுக்கக் கோவை அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர் முற்று முழுதாக மக்கள் சேவகனாக மாற்றமடைந்துவிடுவார்.

கட்சிகளில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் போது ஒரு தடவைக்கு பத்து தடவை சிந்தித்து சந்தர்ப்பம் வழங்கும் வகையில் ஒழுக்கக் கோவை அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

# விமர்சனங்களை ஏற்கும் பண்பு புதிய ஜனாதிபதிக்கு உண்டு

## ஹிருணிக்கா தெரிவிப்பு



புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் பண்புடையவர் என மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் குறைநிறைகள் குறித்து ஜனாதிபதியுடன் தாம் உரையாடியதாகத் தெரிவிதுள்ளார். சாதகமான மற்றும் பாதகமான விமர்சனங்களை ஜனாதிபதி மைத்திரிபால ஏற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். கொலன்னா பிரதேசத்தில் இடம்பெற்று வரும் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைப்பாளர் துமிந்த சில்வா போதைப் பொருள் வர்த்தகர்களை பாதுகாத்து வந்த காரணத்தினால், கடந்த காலங்களில் பொலிஸார் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க விரும்பவில்லை என அவர் தெரிவித்துள்ளார். எனினும், புதிய அரசாங்கம் நல்லாட்சியை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள காரணத்தினால், பொலிஸா அச்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்க் முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.





வவுனியா - தம்பனைச்சோலை கேதீஸ்வரா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கால்கோள் விழாவின் பதிவுகள்... (70)

# போக்குவரத்துக்கு இடையூறாகும்

# காட்டுமரங்களும் பற்றைகளும்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராம வீதிகளுக்கருகில் காட்டு மரங்களும், பற்றைகளும் வளர்ந்திருப்பதன் காரணமாக போக்குவரத்தின் போது பெரும் சிரமங்களை பொதுமக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

துணுக்காய், மாந்தைகிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் கிராம வீதிகளுக்கருகில் பாரிய மரங்களும் பற்றைகளும் உள்ளன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஐயன்கன்குளம், பழைய முருகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய இடங்களில் இது அதிகமாகக்காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதிகளுக்கு அருகில் காடுகள் இருப்பதால் யானை நிற்பதை அவதானிக்க முடியாது, பொதுமக்கள் யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகும் அபாயங்களும் காணப்படுகின்றன.

இது தொடர்பில் மேற்குறித்த பிரதேச செயலகங்களில் இடம்பெறும் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் எடுத்துரைக்கப்பட்ட போதும், நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் உடனடியாக வீதிகளை புனரமைக்க முடியாத நிலை காணப்படுவதாக பிரதேச செயலர்கள் தெரிவிக்கின்றனர்.

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தில் முல்லைத்தீவு கிராம வீதிகளை புனரமைக்குமாறு பிரதேச செயலாளர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், வடமாகாண சபையிடமும் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர்கள் தெரிவித்தனர். (160)


# பதிவாளர் நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள முள்ளிப்பற்று பிரிவிற்கு பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் மிக விரைவில் நியமிக்கப்படவுள்ளார்.

இயக்கச்சி பிரதேசத்தை உள்ளடக்கிய முள்ளிப்பற்று பிரதேசத்தில் இப் பதிவாளர் நியமனம் செய்யப்படுவதன் மூலம் இப் பிரதேச மக்களின் ஆவணப் பதிவு தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட உள்ளன. இந்தப் பதவிக்கு 20 பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் பொருத்தமான ஒருவர் நேர்முகப் பரீட்சையின் மூலமாக தெரிவு செய்யப்பட உள்ளார். (90)

# யாழ்.இந்துக்கல்லூரியில் சிறப்புற நடைபெற்ற கால்கோள்விழா



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியில் தரம் 6 மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த புதன்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு பல கல்வியியலாளர்களும், பழைய மாணவர்களும், கல்லூரி ஆசிரியர்களும், தரம் 6 மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொணடனர்.

இந் நிகழ்விற்கு பிரதம விருநதினராக வி.கைலாயபிள்ளை (தலைவர் யாழ்.இந்துக் கல்லூரி அறக்கட்டளை நிதியம் கொழும்பு) கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், சுசீந்திரன் (மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர்), வடமாகாண சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமியும் இந் நிகழ்விற்கு வருகை தந்திருந்தார்.

இந் நிகழ்வின் முதன் நிகழ்வாக சிவஞான வைரவப் பெருமான் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

பின்னர் பிரதம விருந்தினர்களுக்கு மாலைகள் அணிவித்து பான்ட் வாத்தியங்களுடன் ஊர்வலமாக தரம் 6 மாணவர்களும் கே.கே.எஸ் வீதி வழியாக கல்லூரியின் முன் வாயிலூடாக பிரார்த்தனை மண்டபத்தினுள் வரவேற்கப்பட்டனர். அதன் பின் வருகை தந்திருந்த சுவாமியினால் ஆசியுரையும், அதே போன்று தலைமையுரையினை பிரதி அதிபர் ச.நிமலன் நிகழ்த்தினார்கள்.

பின்னர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் உரையும் பலரது வாழ்த்துரைகளும் இடம் பெற்றன.

பிற்பாடு யாழ் மக்கள் வங்கி கிளையினரால் அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பின்னர் மாணவர்கள் அனைவரும் தமது புதிய வகுப்பறைகளுக்கு சென்று கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அத்துடன் நிகழவுகள் அனைத்தும் இனிதே நிறைவுபெற்றன. (48)

# மாணவர்களின் ஒழுக்கக்கோவை காட்சிப்படுத்தப்பட வேண்டும்

## வலயக்கல்வி அலுவலகம் அறிவுறுத்து

(அச்சுவேலி)

இவ்வருடம் முதலாம் மாதத்திற்குள் அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர் ஒழுக்கக் கோவை அவசியம் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அண்மையில் நடாத்தப்பட்ட அதிபர்களுக்கான கூட்டத்தின் போது அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இது பாடசாலையின் அதிபர் தலைமையில் அனைத்து ஆசிரியர்களுடனும் கலந்தாலோசனை செய்து அவர்களது ஆலோசனைகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டும். தயாரிக்கப்பட்ட மாணவர் ஒழுக்கக் கோவை அனைத்துப் பெற்றோர்களுக்கும் அவசியம் தெரியப்படுத்தப்பட்டிருப்பதுடன் மாணவர்களுக்கும் முழுமையாக அறியப்படுத்தப்பட்டடிருத்தல் வேண்டும்.

இதுதவிர இம் மாணவர் ஒழுக்கக் கோவைகள் அனைத்து அதிபர் அலுவலகம், வகுப்பறைகளிலும், மற்றும் நூலகம், காலைக் கூடப் பிரார்த்தனை மண்டபம் உள்ளிட்ட மாணவர்கள் கூடுகின்ற பிரதான பகுதிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் எனவும் அக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (03)

# கால்கோள் விழா

வலிகாமம் கல்வி வலயத்தின் தரம் ஒன்றிற்கான கால்கோள் விழா இம் முறை யாழ்.கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தில் அதிபர் த.தயானந்தன் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

இதன் போது யாழஎயிட் நிறுவனத்தால் புதிய மாணவர்கள் அணைவருகும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக ஆரம்ப கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.றூ.உதயரட்ணம் மற்றும் இந்து கிறிஸ்தவ மத குருமார்களும் கலந்து சிறப்பித்தனர்.(48)

## முரசின் இன்றைய பலன்

(23.01.2015 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் தை மாதம் 09 ஆம் திகதி.
மரணயோகம் / சதுர்த்தி.
இராகு காலம 09.36 - 11.06 வரை. சுபநேரம 03.36 - 05.06 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
கணக்கில் நம்பகத்தன்மை இன்மையால் வாழ்க்கையை முறித்துவிடல்.

**ரிஷபம்**
உளக்கட்டுப்பாட்டை கடைப்பிழத்ததால் நோயின் தாக்கம் குறைவடைதல்.

**மிதுனம்**
கொடுக்கல்வாங்கல் மனநிறைவினைத்தருதல்.

**கடகம்**
பெற்றோரின் தேக நலம் கருதி பயணத்தைக் கைவிடல்.

**சிம்மம்**
சொத்துப்பிரச்சினை சுமுக முடிவினை எட்டாமையினால் முறையிடச் செல்லல்.

**மீனம்**
அட்டமத்துக்குரு இருப்பதினால எதிரியின் அடாவழித்தனம் ஏற்படும் அபாய நிலையுண்டு.

**கன்னி**
வியாழசுகம் இருப்பதினால் வர்த்தக முயற்சியில் ஈடுபட விழைதல்.

**கும்பம்**
மேலதிக பொறுப்புக்கள் சுமத்தப்பட்டதால் வேலைப்பளு அதிகரித்தல்.

**மகரம்**
பொறுப்பின்றிக் கொடுத்த கடனைப் பெறமுடியாது அவதிப்படல்.

**தனுசு**
நோய்குணமடைய தெய்வதலமொன்றுக்கு விஜயஞ் செய்தல்.

**விருச்சிகம்**
பரீட்சைச்சித்தியினால் அரசுத்தொழில் கிடைக்கும் நத்பிக்கை பிறத்தல்.

**துலாம்**
ஏழரைச் சனி கடைக்கூறு நிலைக்கு வந்ததால் தனித்தியங்க முயலுதல்.

## பிரிந்தது காதல் ஜோடி

நட்சத்திர கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ மனக் கசப்பு காரணமாக தனது காதலியை கழற்றி விட்டுள்ளார். கடந்த ஆண்டில் உலகின் சிறந்த கால்பந்து வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ள போர்த்துக்கலை சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ ரஷ்ய மொடல் அழகியான இரினா ஷாக்கை காதலித்து வந்தார்.

தற்போது இருவருக்கும் மனகசப்பு ஏற்படவே இருவரும் பிரிந்து விட்டனர்.

இது குறித்து ரொனொல்டோ கூறுகையில் எங்களுக்குள் இருந்த ஐந்தாண்டு காதல் முடிவுக்கு வந்து விட்டது. இரினா மகிழ்ச்சியாக இருக்க நான் வாழ்த்துகிறேன். என்னுடைய டுவிட்டர் கணக்கை இரினா பின்பற்றுவதில்லை என்று தெரிவித்தார். ரொனால்டோவிற்கு தற்போது புதிய காதலி கிடைத்துள்ளதாகவும் தற்போது அவருடன் தான் நிறைய நேரம் செலவழிப்பதாக போர்ச்சுகீசிய பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. ரொனொல்டோவின் புதிய காதலி பெயர் லூசியா என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# விக்ரம், ராஜன், கங்கு கிரிக்கெட் தொடர் கொக்குவில் இந்துவில் நாளை ஆரம்பம்

விளையாட்டு செய்திகள்

(கொக்குவில்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தினால் வருடா வருடம் நடாத்தப்படும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் தொடர் நாளைய தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் அழைக்கப்பட்ட நான்கு அணிகள் பங்குபற்றுகின்றன. இதில் யாழ். பல்கலைக்கழகம் சென்றலைட்ஸ், கொக்குவில் கே.சி.சி.சி., ஜொலிஸ்ரார் அணிகள் மோதவுள்ளன. லீக் அடிப்படையில் நடைபெறும் இப்போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் இரு அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாளை நடைபெறவுள்ள முதல் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணியும், இரண்டாவது போட்டியில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிய இளைஞர் விளையாட்டு இலங்கையிலிருந்து அகற்றல்

மூன்றாவது ஆசிய இளைஞர் விளையாட்டு விழாவின் அனுசரணையிலிருந்து இலங்கை அகற்றப்படவுள்ளது. அம்பாந்தோட்டையை மையப்படுத்தி 2017ஆம் ஆண்டில் மூன்றாவது ஆசிய இளைஞர் விளையாட்டு விழாவை நடாத்த ஆசிய ஒலிம்பிக் சபை (ஓ.சீ.ஏ.) தீர்மானித்திருந்தது.

இந்த விளையாட்டு விழா தொடர்பாக இலங்கை இதுவரை செய்துள்ள ஏற்பாடுகள் தொடர்பாக திருப்தி காண முடியாததால் இத்தீர்மானத்தை ஓ.சீ.ஏ. அதிகாரிகள் இவ்விழாவை இலங்கையிலிருந்து அகற்றத் தீர்மானித்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு ஆசிய ஒலிம்பிக் சபையினால் இவ்வாரத்தில் அனுப்பப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு விழாவின் அனுசரணை அகற்றிக்கொள்ள எதிர்பார்ப்பதாக இம் மாத முதல் வாரத்தில் மின் அஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை அகற்றப்படுவதால் மத்திய கிழக்கு நாடொன்றின் அனுசரணை இவ்விழாவுக்காகப் பெறப்படவுள்ளது.

டுபாய் நகரம் இவ் விழாவுக்காகத் தெரிவு செய்யப்படலாமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

# களத்தில் ஒழுக்கத்தைப் பேண ஐ.சி.சி. தீவிரம்

## வாக்குவாதம், முறைகேடு, வசைபாடுதலில் ஈடுபடுவோருக்கு கடும் நடவடிக்கை

விளையாட்டரங்கிற்குள் வீரர்கள் மத்தியில் இடம்பெறும் வாக்குவாதங்கள் மற்றும் முறைகேடாக பேசுதல் போன்றவற்றுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

சில வீரர்கள் நீதியை தங்கள் கைக்குள் எடுத்துக்கொண்டு ஒழுக்கக் கோவைகளை மீறும் வகையில் செயற்படும் பழக்கம் தற்போது அதிகரித்துள்ளதைக் காணமுடிகின்றது.

தங்களது அணிக்கு சாதகமான முடிவைப்பெறும் நோக்கில் சில வீரர்கள் விதிகளுக்கு புறம்பாக சென்று எதிரணி வீரர்களை மனோரீதியாக வீழ்த்தும் பொருட்டு வசைபாடுவது அதிகரித்துள்ளது.

இத்தகைய சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மத்தியஸ்தர்களை கடுமையாக செயற்படுமாறு அறிவுறுத்தியுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவிட் றிச்சர்ட்சன் குறிப்பிட்டார்.

எதிரணி வீரர்களை மனோரீதியான உளைச்சலுக்கு உள்ளாக்குவதால் ஒரு



வீரருக்கு அபராதம் விதிக்கப்பட்டால் அது குறித்து கவலைப்படப் போவதில்லை என சில அணிகள் தலைமைத்துவங்கள் கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இம்முறை உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின்போது ஒழுக்க விதிகளை மீறும் வகையில் வீரர்கள் செயற்படுவதை கட்டுப்படுத்துவதற்கு மத்தியஸ்தர்களுக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வசைபாடுவது, தூஷிப்பது போன்ற சம்பவங்கள் உலகக் கிண்ணப் போட்டிகளின்போது அனுமதிக்கப்படாத வகையில் கடந்த ஆறு மாத காலமாக முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக டேவ் றிச்சர்ட்சன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஒழுக்க விதிகளை மீறும் வீரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு மத்தியஸ்தர்களுக்கும் போட்டி பொது மத்தியஸ்தர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மைதானத்தில் ஒழுக்கக்குறைவாக நடந்துகொண்டமை தொடர்பாக கடந்த நான்கு மாதங்களில் ஒழுக்கக் கோவையை மீறிய 12 பேருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. உலகக் கிண்ணப் போட்டிகளின்போது இம் மாதிரியான சம்பவங்கள் மீண்டும் இடம்பெற வாய்ப்பு உள்ளது.

எனவே அவற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டு போட்டிக்கு முன்பதாக சகல அணிகளும் பொது மத்தியஸ்தர்களால் கடுமையாக அறிவுறுத்தப்படுவார்கள் என டேவ் றிச்சர்ட்சன் மேலும் தெரிவித்துள்ளார்.

## வலைத்தளங்களைப் பயன்படுத்தத் தடை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிரடி

(லாகூர்)

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் போது சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்த பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் அணியின் முகாமையாளர் நவீட் அக்ரம் கூறுகையில், அதிகப்படியான நேரம் இருப்பவர்கள் மட்டுமே சமூக இணையத் தளங்களில் நேரத்தை செலவிடுவர். ஆனால், எங்கள் வீரர்களுக்கு, கிரிக்கெட்டில் கவனம் செலுத்தவே நேரம் சரியாக இருக்கும். மற்ற விடயங்களுக்கு நேரம் இருக்காது. அத்தோடு, சமூக வலைத் தளங்களில் பதிவிடும் கருத்துகள் சில நேரங்களில் சர்ச்சையைக் கிளப்பும். எனவே, அதற்கு இடம் கொடுக்க விரும்பவில்லை என்றார்.

## இன்று 5ஆவது ஒரு நாள்

(ஹமில்டன்)

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் ஐந்தாவது ஆட்டம் இன்று ஹமில்டனில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே நடைபெற்ற மூன்று போட்டிகளில் நியூசிலாந்து அணி இரு வெற்றிகளைப் பதிவு செய்து முன்னிலையில் உள்ளது. ஒரு போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணி ஐந்தாவது போட்டியில் வென்று வெற்றி எண்ணிக்கையை சமன் செய்ய முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. ஓப்பன்; போராடி வென்றார் நடால்

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில், நட்சத்திர வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) 4 மணி நேரம் போராடி அமெரிக்காவின் ஸ்மிக்செக்கை வீழ்த்தினார்.

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் நடால் (3ஆவது தரநிலை) 6-2 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் ஸ்மிக்செக் (112வது தரநிலை) 6-3 என வென்று பதிலடி கொடுக்க சமநிலை ஏற்பட்டது. மூன்றாவது செட்டில் இரு வீரர்களும் தங்கள் சேர்வீசில் புள்ளிகளைக் குவித்து விடாப்பிடியாக போராடியதால், ஆட்டம் டை பிரேக்கர் வரை நீடித்தது.

81 நிமிடம் நடைபெற்ற இந்த செட்டை ஸ்மிக்செக் 7-6 (7-2) என்ற கணக்கில் கைப்பற்றி 2-1 என முன்னிலை பெற்றார். நான்காவது செட்டில் அவரது சேர்வீஸ் ஆட்டங்களை முறியடித்து முன்னேறிய நடால் 6-3 என வெற்றி பெற, இரு வீரர்களும் தலா 2 செட்களில் வென்று சமநிலை வகித்தனர். இதையடுத்து, 5ஆவது மற்றும் கடைசி செட் ஆட்டத்தில் அனல் பறந்தது. ஒரு மணி நேரத்



துக்கும் மேலாக நீடித்த இந்தச் செட்டில் அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்தி வென்ற நடால் 6-2, 3-6, 6-7 (2-7), 6-3, 7-5 என்ற செட் கணக்கில் 4 மணி, 12 நிமிடம் போராடி வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். முன்னணி வீரருக்கு கடும் நெருக்கடி கொடுத்த ஸ்மிக்செக் இரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவின் மூன்றாவது சுற்றுக்கு செரீனா வில்லியம்ஸ் முன்னேறியுள்ளார். நேற்று நடைபெற்ற இரண்டாவது சுற்றில் உலகின் முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் ரஷ்யாவின் ஜுவனோராவை எதிர் கொண்டார்.

இதில் செரீனா 7-5, 6-0 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார். 3ஆவது சுற்றில் செரீனா எலீனா (உக்ரைன்) அல்லது நிகோலி கிப்சை (அமெரிக்கா) எதிர்கொள்ளவுள்ளார்.



# தொடரை வென்றது தென்னாபிரிக்கா

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியது. நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில், ஒன்பது விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வென்றது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளில் தென்னாபிரிக்கா வென்றது. மூன்றாவது போட்டி ஈஸ்ட் லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி பிலாண்டர், இம்ரான் தாஹிர் ஆகியோரின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. சாமுவேல்ஸ் சிறிது நேரம் தாக்குப் பிடித்தபோதிலும் ஏனைய வீரர்களால் களத்தில் நிலைத்திருக்க முடியவில்லை. நிறைவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 33.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் சாமுவேல்ஸ் 26, ஜோசன் ஹோல்டர் 17, கார்டர் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இம்ரான் தாஹிர் நான்கு, பிலாண்டர் மூன்று, ஸ்ரெய்ன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு 123 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 24.4 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அம்லா 61, டுபிளிசர் 51 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை இரு போட்டிகள் மீதமுள்ள நிலையில் தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகன் விருதை பிலாண்டர் பெற்றுக் கொண்டார். இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது போட்டி நாளை மறுதினம் எலிசபேர்த்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச ஒலிம்பியாட் போட்டி மாணவர்களை தயார்ப்படுத்தவும்

## அதிபர்களுக்கு அறிவுறுத்து

(அச்சுவேலி)

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய இவ்வருடமும் நடைபெறவுள்ளது. இதில் தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சை 2014 ஆம் ஆண்டில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி யோர் மற்றும் தரம் 6,7 வகுப்புக்களில் கற்ற மாணவர்களிலிருந்தும் தெரிவு செய்வதற்கு, வலயக் கல்வி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்வோரின் விபரங்களை அதற்கான மாதிரி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய 2014 ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சை 181 மற்றும் அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று தற்போது தங்கள் பாடசாலைகளில் தரம் 06 இல் கற்கும் மாணவர்கள் அனைவரும் வலயமட்டப் பரீட்சைக்கு தகுதியானவர்கள் என்பதால் அவர்களது பெயர் விபரங்கள் அனுப்பி வைக்க வேண்டியதில்லை என்பதால் அவர்களுக்கு வலய மட்டப் பரீட்சை தொடர்பாக அறியப்படுத்துவதுடன் பாடசாலைகளிலேயே பயிற்சி அளிக்க ஆவன செய்யப்பட வேண்டும்.

என்பதுடன் 2014 ஆம் ஆண்டில் தரம் 6,7 இல் விஞ்ஞான பாடத்தில் இறுதித் தவணைப் பரீட்சையில் 88உம் அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்ற 2015 டிசம்பர் 31 இல் 13 வயதின் கீழான மாணவர்களின் விபரங்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து இவ்வார இறுதிக்குள் அனுப்பி வைப்பதுடன் அவர்களுக்கு வலய மட்டப் பரீட்சைகளுக்கான பயிற்சிகளை வழங்குமாறும் அதிபர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ள அதே வேளை வலய மட்டப் பரீட்சைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 09 மணி முதல் 10.30 மணிவரை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பரீட்சை வினாத்தாள் தரம் 6,7,8,9 விஞ்ஞான பாடத் திட்டத்தை உள்ளடக்கியதாக அமையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (03)

# பாடசாலை மட்ட கண்காட்சி வலயத்தால் நிதி ஒதுக்கீடு

(அச்சுவேலி)

யுனிசெவ் செயற்றிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சிறுவர் நேயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆரம்பக்கல்வி செயற்பாடுகள் தொடர்பான கண்காட்சியினை பாடசாலை மட்டத்தில் ஒழுங்கு செய்து நடாத்தி முடிப்பதற்கு ஒவ்வொரு பாடசாலைக்கும் ரூபா 5000 வீதம் பாடசாலை அபிவிருத்திக் கணக்கில் வைப்பிலிடப்படும் என யாழ்.கல்வி வலய கல்வி முகாமைத்துவ உதவிக்கல்விப் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்காட்சியினை பாடசாலை மட்டத்தில் 28ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தி முடிவுகள் 30ஆம் திகதியன்று கிடைக்கத்தக்க வகையில் வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைப்பதுடன் இக்கண்காட்சியில் ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகிய மூன்று தரப்பினரும் பங்குபற்ற ஆவண செய்யப்படல் வேண்டும்.

கண்காட்சியில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் மூன்று பொருட்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு வலய மட்ட கண்காட்சிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வலய மட்டப் போட்டியில் தெரிவு செய்யப்படும் 10 பாடசாலைகளுக்கு பரிசில்களும் பங்குபற்றும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

# தையல் கண்காட்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் தையல் கண்காட்சியும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன் கலந்து கொள்ள உள்ளார்.

சிறப்பு அதிதியாக மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் கலந்து கொள்ள உள்ளார்.செந்தாமரை உதவும் கரங்கள் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் நடத்தப்பட்டு வந்த தையல்பயிற்சியினை நிறைவு செய்த பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.அதனைத் தொடர்ந்து பயிற்சியாளர்களால் தயாரிக்கப்பட்ட ஆடைகள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படவும் உள்ளன. (90)

# "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" அரங்க தனி நடிப்பு போட்டி

(யாழ்ப்பாணம்)

நாடகக் கலையை மீளெழுச்சிக்கு உதவும் முகமாக யாழ்ப்பாண மாநகர சபையும் செயல் திறன் அரங்க இயக்கமும் இணைந்து "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" எனும் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இதன் ஒரு அம்சமாக பிரமாண்டமான தனி நடிப்பு போட்டி ஒன்றினை நடத்தி அதனை தொடர்ந்து ஓராள் அரங்கத் ஆற்றுகைத் திருவிழாவையும் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

போட்டியில் பங்கு பற்றுபவர்கள் தாம் விரும்பிய நிஜமான கதை/சம்பவம்/ நிகழ்வு/ புராண / இதிகாசக் கதையொன்றை காட்சியமைப்பு, இசை, ஒலி மற்றும் ஒளியமைப்புடன் நடித்துக் காட்டுதல் வேண்டும்.

பதினெட்டு வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டியும் மற்றும் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான திறந்த போட்டியும் என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டியில் ஆண் பெண் இருபாலாரும் பங்குபற்றலாம்.

போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 25000.00 ரூபாவும் இரண்டாம் இடத்தினைப் பெறுபவருக்கு 20000.00 ரூபாவும் மூன்றாம் இடத்தினைப் பெறுபவருக்கு 15000 ரூபாவும் பரிசுத் தொகையாக வழங்கப்படுவதோடு சான்றிதழ்களும் வழங்கப்படும். மேலும் சிறந்த ஐந்து தனிநடிப்பு ஆற்றுகைகளுக்கு தலா 2500 ரூபாவும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் தெரிவு செய்யப்படும் தனிநடிப்பு ஆற்றுகைகள் ஏப்ரல் மாதம் 11,12 திகதிகளில் நல்லூரில் பிரமாண்டமான ஏற்பாட்டில் நடைபெறும் ஓராள் அரங்காற்றுகைத் திருவிழாவில் மேடையேற்றப்படும்.

போட்டிக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு தனிநடிப்பு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுவதோடு ஒளி ஒலி அமைப்பு வசதிகளுடன் மேடையேற்றுவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

போட்டியில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் யாழ்ப்பாண மாநகர சபையில் நேரடியாக விண்ணப்பப்படிவங்களை பெற்று விண்ணப்பிக்க முடியும். இதனைவிட jaffnatheatre@gmail.com என்ற ஈ.மெயில் முகவரியில் தொடர்பு கொண்டும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பெப்ரவரி 05 விண்ணப்ப முடிவு திகதி ஆகும் என ஏற்பாட்டாளர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (90)

# பொதுச் சந்தைப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(அச்சுவேலி)

அச்சுவேலி பொதுச் சந்தைப்பகுதியில் கட்டாக்காலி நாய்கள் பெருகிக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இறைச்சி விற்பனை நிலையம் மற்றும் மீன் சந்தை ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் கூட்டமாக காணப்படுகின்றன. இறைச்சி மற்றும் மீன் போன்றவற்றின் எஞ்சிய பகுதிகளை நாய்களுக்கு வீசுவதாலேயே அப்பகுதிகளில் அவை நிலைகொண்டுள்ளதாகவும் இதனால் சந்தைக்கு செல்வோர் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்வதுடன் போக்குவரத்துச் செய்வதிலும் சிரமங்கள் ஏற்படுவதாகவும் இவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சந்தைப் பகுதிகளை இவை அசிங்கப்படுத்தி விடுவதாகவும் பின்னர் தாம் சுத்தம் செய்தே விற்பனையினை மேற்கொள்வதாகவும் வியாபாரிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, கட்டாக்காலி நாய்களின் நடமாட்டத்தைத் தடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும் என சந்தைக்கு வரும் நுகர்வோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (85)

# பொதுக் கூட்டம்

கிராய் இந்து மயான அபிவிருத்தி தொடர்பான பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கரணவாய் வேதாரணியம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் க. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் ச.சிவசிறி, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் பொ.வியாகேசு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக கரணவாய் கிராம உத்தியோகத்தர் பா. வைகுந்தன், கரணவாய் தெற்கு கிராம உத்தியோகத்தர் திருமதி லக்ஷ்மன் தனுஜா, கரணவாய் கிழக்கு கிராம உத்தியோகத்தர் சி. அசோகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (18)



யாழ். எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் 2015 ஆம் ஆண்டிற்கான மாணவ தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் நடைபெற்றபோது... (48)

# தமிழ் மக்களிடையே மாற்றம் நிகழ்வது எப்போது?

08.01.2015 இல் இலங்கையில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனா வெற்றியீட்டியுள்ளார். இவர் இலங்கையின் பிரதான ஆளுங் கட்சிகளில் ஒன்றான சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளராக இருந்தவர்.

ஆனால் நடந்து முடிந்த தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக பொது வேட்பாளராக அதிரடியாக இவர் நிறுத்தப்பட்டார். இவரது திடீர் வேட்பாளர் நியமனம் "எதிர்க்கட்சிகளின்" பொதுத்தெரிவு என்று கூறப்பட்ட போதிலும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவர் சந்திரிகா குமாரதுங்க மற்றும் இன்னோரன்ன உள் நாட்டு, வெளிநாட்டு சக்திகளே வேட்பாளர் தெரிவின் பின்னணியில் இருந்தனர்.

மகிந்த தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசை கவிழ்க்க வேண்டுமென்பதில், கடந்த 5 வருடங்களாக உள்நாட்டு, வெளிநாட்டு தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் முனைப்போடு இருந்தனர். இதற்கு தீனி போடுவது மாதிரியாக, தமது நலன்களை மறைமுகமாக பின்னிறுத்தி, யுத்தத்தின் போதான போர்க்குற்றங்கள் குறித்தும், யுத்தத்தின் பின்னர் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளும் மகிந்த அரசு மீது குற்றம் சாட்டின. அத்துடன் ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கை அரசுக்கெதிராக அமெரிக்கா தீர்மானங்களை கொண்டுவந்து நிறைவேற்றியது.



இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கை மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்துள்ளதாக காலங்காலமாக சொல்லப்பட்டு வருகின்றது. ஆனால், அதனது உள்ளடக்கம் இலங்கையின் ஆளும் வர்க்கத்தினருக்கும் பெரும் இராணுவ, பொருளாதார வலிமை கொண்ட பிராந்திய, உலக வல்லரசுளுக்கும் புரிந்த ஒன்றாகவே இருக்கின்றது.

அதாவது இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தினை தமது கைக்குள் போடத் துடிக்கும் வல்லரசுகளின் முயற்சிகளை இலங்கை மக்களில் பெரும்பாலானவர்கள் உணர்ந்தவர்களாக இல்லையென்பதே இதன் அர்த்தம்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் அந்நிய சக்திகள் இருக்கின்றன என்பது தெட்டத்தெளிவாக தெரிகின்ற போதிலும் இதனை பகிரங்கமாக சொல்லாமல் எல்லா தரப்பினருமே அடக்கி வாசிக்கின்றனர். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா சென்று படித்துவிட்டு வந்ததும், ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னைய தினம் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி மகிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் கதைத்ததும் சகல ஊடகங்களிலும் வெளியான செய்திகளே.



ஆனால் எந்த ஊடகமும் ரணிலுக்கு கிடைத்த அறிவுறுத்தல்கள் என்ன, ஜோன் கெரி, மகிந்தவிற்கு போட்ட உத்தரவுகள் என்ன என்பதை அலசியாராயவில்லை.

இலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதில் அந்நியர்கள் தீர்மானகரமான பங்கை வகித்தார்கள் என்ற உண்மைகள் ஒருபுறமிருக்க, மகிந்தாவை தோற்கடித்தது தாமே என பல உள்ளூர் சக்திகள் அப்பாவித்தனமாக போட்டிபோட்டு கூறிக் கொண்டு இருக்கிறார்கள். மகிந்தா 4 இலட்சத்து 49 ஆயிரம் வாக்குகளால் தோல்வியுற்றமைக்கு காரணம், ஜாதிக ஹெல உறுமய சிங்களவர்களது வாக்குகளால்தான் என்றும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழர் வாக்குகளால்தான் என்றும், முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் வாக்குகளால் தான் என்றும் சொல்லி வருகின்றன.

இலங்கையில் காலத்துக் காலம் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. சிறிசேனா ஆட்சியும் ஒருநாள் கவிழ்ந்தான் போகின்றது. இதனால்தான் மாற்றமென்பது மாற்ற முடியாதது என்று கூறுவார்கள். ஆனால் 60 வருட காலமாக இலங்கை தமிழர் அரசியலில் மாற்றம் எதுவும் நிகழவில்லை.

எப்போதுமே குறுந்தேசியவாதிகளே பாராளுமன்ற பாதையிலும் சரி, ஆயுதப்போராட்டத்திலும் சரி, தமிழரை வழி நடத்தி வந்தனர். வருகின்றனர். எந்த விதிகளுக்கும் அடங்காத இந்த தமிழரின் தலை விதியையெண்ணி நொந்து வேகுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

- வானவில் இதழ் 49 தலையங்கம்.

---

# டோட்டோ சானும் நமது கல்வி முறையும்

ஜப்பானிய தொலைக்காட்சியில் தோன்றும் புகழ்பெற்ற நடிகை மற்றும் அறிவிப்பாளரான Tetsuko Kuroyanagi எழுதிய குழந்தைகளுக்கான நூல் 'Totto-chan, The Little Girl at the Window' (டோட்டோ - சான் ஜன்னலின் ஓரம் சிறுமி). இந்நூல் முதல் ஆண்டிலேயே 45,00,000 விற்பனையானது. ஒருவகையில் இது Tetsuko Kuroyanagi அவர்களின் அனுபவக் கதை. கோபயாஷி என்பவரின் சுய முயற்சியில் உருவான "டோமோயி" எனும் பாடசாலையைப் பற்றியும் அப்பாடசாலையில் தான் பயின்ற அனுபவம் குறித்தும் இந்நூல் சுவாரசியமாக விவரிக்கிறது.




டோட்டோ - சான் ஒரு பள்ளியிலிருந்து நீக்கப்படுகிறாள். அதற்குப் பள்ளி நிர்வாகத்திடம் சில காரணங்கள் உள்ளன. முதலாவது காரணம், அவள் அடிக்கடி மேசை லாச்சியை இழுத்து மூடுகிறாள். அது மற்ற மாணவர்களுக்குத் தொல்லையாக இருக்கிறது. இரண்டாவது காரணம், அவள் அடிக்கடி எழுந்து ஜன்னலின் ஓரம் சென்று விடுகிறாள். அங்கு செல்லும் வீதி இசைக்கலைஞர்களை அழைக்கிறாள். இந்தக் காரணங்கள் அவளை பள்ளியிலிருந்து நீக்க போதுமான காரணங்களாகின்றன. அவள் தாய் அவளிடம் அவள் செய்கைக்கான காரணம் கேட்கிறாள். டோட்டோவிடம் காரணம் இல்லாமல் இல்லை.

"வீட்டிலுள்ள என் மேசையை நீ இழுப்பியே, அதில லாச்சிதான் இருக்கு.... ஆனால் பள்ளிக் கூடத்தில உள்ள மேசையின் மேல் பகுதியை நீ தூக்கி விடலாம். அந்த மேசையே ஒரு பெட்டி மாதிரி இருக்கு. அதை திறந்து மூட நல்லா இருக்கு," என தனது நியாயத்தைக் கூறுகிறாள். அதோடு இல்லாமல், புதிதாக அவள் சேரப்போகும் பள்ளிக்கு "இசைக்கலைஞர்கள் வருவார்களா?" என ஆவல் பொங்க பள்ளியிலிருந்து நீக்கப்பட்ட வலி தெரியாமல் கேட்கிறாள். அம்மாவுக்குதான் வருத்தம். அவள் குணத்துக்கு ஏற்ற ஒரு பள்ளிக்கூடத்தைக் கண்டடைகிறாள். அதுதான் "டோமோயி".

"டோமோயி" என்ற அந்தப் பள்ளி மற்ற பள்ளிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. கைவிடப்பட்ட ரயில்பெட்டிகள் வகுப்பறைகளாக மாற்றப்பட்டுள்ளன. சுதந்திரமான பாடத்திட்டம், சரிவிகித உணவு முறை, உடல் ஊனமுற்ற குழந்தைகளும் பங்குபெறும் வகையில் விளையாட்டுப் போட்டிகள், இயற்கையிலிருந்து நேரடியாக கற்பிக்கும் முறை, கேளிக்கைகள், இசையுடன் கூடிய உடற்பயிற்சி வகுப்புகள், திறந்தவெளிச் சமையல் வகுப்புகள் எனகோபயாஷின் முழு கற்பனையில் குழந்தைகளுக்குக் குதூகலம் கொடுக்கவே அப்பள்ளி உருவாக்கப்பட்டுள்ளது.

கோபயாஷிக்கும் டோட்டோ- சானை மிகவும் பிடித்துப் போய் விடுகிறது. அவளை பேச விட்டு கேட்கிறார். அது அவளுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவளை அவ்வளவு பேசவிட்டுக் கேட்ட முதல் ஆசிரியர் அவர்தான். அதனாலேயே அவள் ஆர்வமாகப் பள்ளிக்குச் செல்லத் தொடங்குகிறாள். தனது ஒவ்வொரு தவறுகளின் விளைவுகளை அறிந்து, அந்த அனுபவங்கள் மூலமே அதை திருத்தும் வகை செய்கிறார் திரு. கோபயாஷி.

முடிவில்லாத பயணத்தைத் தொடர்வது போல அந்த ரயில் பெட்டி வகுப்பறை மாணவர்களுக்கு காட்சி கொடுக்கிறது. பக்கத்து ஜன்னல் ஓரம் காற்றில் அசையும் செடிகள் மாணவர்களை அவ்வாறு யோசிக்க வைக்கிறது. மாணவர்கள் விரும்பிய இடத்தில் அமரலாம். எந்தக் கட்டுப்பாடும் இல்லை. ஆசிரியர் அன்று படிக்க வேண்டிய பாடங்களைப் பட்டியலிட முதல் பாடத்தை மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப தொடங்கலாம். அதோடு மாணவர்கள் நீச்சல் குளத்தில் முழு நிர்வாணமாக நீந்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

உடல்கூறு வித்தியாசம் கொடுக்கும் ஆர்வத்தை அகற்றும் திட்டத்திற்காகக் கோபயாஷி இந்த நீச்சல் நேரத்தைப் பயன்படுத்துகிறார். குழந்தைகளைப் பாடத்திட்டத்திற்குள் முக்கி எடுக்காத பள்ளியாக அதை மாற்றுகிறார். பள்ளி முடிவதற்குக் காத்திருக்கும் மாணவர்கள் மத்தியில் அந்தப் பள்ளி தொடங்குகின்ற நேரத்திற்காக அவர்கள் எதிர்பார்ப்பை இதயத்தில் ஏற்றுக் கொண்டு காத்திருக்க வைக்கிறார்.

"டோமோயி" குறித்தும் கோபயாஷி குறித்தும் மிகப்பெரிய ஆர்வம் நம் மனதில் இந்நூலின் மூலம் வளர்ந்துகொண்டே போக, இரண்டாம் உலகப் போரில் பள்ளி அறைகளாகப் பயன்பட்ட ரயில் பெட்டி வகுப்புகளின் மீது விமானங்கள் ஏராளமான குண்டுகளை வீசி பள்ளியை அழிந்தது. கோபயாஷி தன் பள்ளி எரிவதை அமைதியாகப் பார்க்கிறார். போர் சூழலால், டோட்டோ-சான் வேறு ஊருக்குக் குடும்பத்துடன் செல்கிறாள். கோபயாஷி அவளை வழியனுப்புகிறார். அப்போதும் டோட்டோ-சானுக்கு அவர் முன்பு சொன்ன சொற்கள் மனதில் மீண்டும் மீண்டும் ஒலிக்கிறது....


"உனக்குத் தெரியுமா? நீ உண்மையிலேயே நல்ல பெண்."

சரி, நம் கல்வி முறை எப்படியிருக்கிறது? இறுகிப்போன பாடத்திட்டம். புத்தகங்களை இயந்திரத்தனமாக ஒப்புவிக்கும் ஆசிரியர்கள். சோதனையை மையமிட்ட கற்றல் முறை.

காகிதங்கள் தீர்மானிக்கப்படும் திறமை. வாழ்வுடன் ஒட்டாத போதனை. மெதுநிலை மாணவர்களை எட்டாத அணுகுமுறை என பல்வேறு சிக்கல்களுக்கிடையில் நமது தலைவர்கள் பல்கலைக் கழகம் உருவாக்கி செய்யும் நாடகங்கள் யாருக்காக என்பதே இன்றுவரை கேள்விக் குறியாக உள்ளது.

கோபாஷி போன்ற ஆசிரியர்கள் நம் பாடசாலைகளில் இருந்தாலும் டோட்டோ சான் போன்ற மாணவிகள் ஆர்வம் பிதுங்க அவர்களை நாடிச்சென்றாலும் கல்வித்திட்டம் எதற்கும் வழிவிட்டதாக இல்லை. காகிதங்களை நம்பி தீர்மானிக்கப்படும் மாணவனின் திறன் தொடரும் வரை டோமாயிகள் நம் நாட்டில் குண்டுகள் விழாமலேயே உயிரற்றே போகின்றன.

- ம.நவீன்




# கேட்டுப் பாருங்கள்

காலத்தின் அருமையை அவர்களிடம் கேட்டுப் பாருங்கள்:

- ஓர் ஆண்டின் அருமையை பரீட்சையில் தோல்வியடைந்த மாணவனிடம் கேட்டுப் பாருங்கள்.
- ஒரு மாதத்தின் அருமையை, குறைப்பிரசவம் கண்ட பெண்ணிடம் கேட்டுப் பாருங்கள்.
- ஒரு நாளின் அருமையை ஒரு நாள் தாமதித்து வேலையில் இணைந்ததால், பதவி உயர்வு இழந்த ஊழியரிடம் கேட்டுப் பாருங்கள்.
- ஒரு மணி நேரத்தின் அருமையை பரீட்சை எழுதிவிட்டு வந்த ஒரு மாணவனிடம் கேட்டுப் பாருங்கள்.
- ஒரு நிமிடத்தின் அருமையை ரயிலைத் தவறவிட்டு விட்டு வேலைக்கான நேர்முகப்பரீட்சை வாய்ப்பை இழந்தவரிடம் கேட்டுப் பாருங்கள்.
- ஒரு நொடியின் அருமையை விபத்தில் உயிர் பிழைத்தவரிடம் கேட்டுப் பாருங்கள்.

# மெட்டு போடுவதுதான் நம் வேலை!



"சங்கராபரணம்", "சலங்கை ஒலி" மாதிரியான படங்கள்தான் என் இசைக்கு ஆதாரம். ஆனால், அது மாதிரியான படங்களை இப்போது உருவாக்க முடியுமா? என்று தெரியவில்லை. அப்படி வந்தால் என் முழுத் திறமை அதில் வெளிப்படும் என்று கூறும் இசையமைப்பாளர் தேவி ஸ்ரீபிரசாத் துள்ளல் இசைக்காகவே ரசிகர்களால் கொண்டாடப்படுகிறார்.


நான் மாண்டலின் சீனிவாஸின் சிடன். அவரிடமிருந்து கொண்டு வந்த வி'யங்கள் இன்னும் நிறைய உள்ளுக்குள்ளேயே இருக்கின்றன. அதைப் படங்களின் மூலம் கடத்தி வர வேண்டும் என்பது ஆசை. அடுத்த மாதம் மாண்டலின் சீனிவாஸக்கு ஓர் இசை அஞ்சலி நடத்த இருக்கிறோம். கமல், இளையராஜா உள்ளிட்ட ஆளுமைகள் கலந்து கொள்ள இருக்கிறார்கள். அதைத் திறம்பட நடத்த இப்போதைக்கு வேலைகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. உலக இசைப் பயணம், பொப் ஆல்பம் ்ன அடுத்தடுத்து நிறைய திட்டங்கள் இருக்கின்றன. நிறைய நிறையச் சாதிக்க வேண்டும்.... உற்சாகத்தின் ஊற்றாக இருக்கிறார் டி.எஸ்.பி. என்றழைக்கப்படும் தேவி ஸ்ரீபிரசாத்.

அலுவலகத்தில் இவரது பின்னணியில் இளைய்ராஜா போஸ்டரை பிரமாண்டமாக வைத்திருக்கிறார். துள்ளல் பாடல்களால் ரசிகர்களின் மனதை திருடிய அளவுக்கு... உங்களின் மெலடி பாடல்கள் இதயங்களை மீட்டவில்லையே...? என்ற கேள்விக்கு,

"ம்.... எனக்கு அப்படியொரு அடையாளம் உருவாகி விட்டது. நான் என்ன செய்வது? ஆனால், என் ஹிட் பட்டியலில் மெலடிகளுக்கும் அதிக இடங்கள் உண்டு. "ஆறு", "சந்தோஷ் சுப்ரமணியம்", "சச்சின்", "வில்லு", "மன்மதன் அம்பு", "சிங்கம்", "சிங்கம் 2", "பிரம்மன்" என வரிசையாக வந்த படங்களில் குத்துப் பாடல்கள் மட்டுமே இல்லை. அதைத் தாண்டி மெலடி பாடல்களும் நிறைய இருக்கின்றன. "சச்சின்" படத்தில் ஒரு பாடலைத் தவிர எல்லா பாடல்களும் மெலடிதான். "ஆறு" படத்திலும் அப்படித்தான். "மன்மதன் அம்பு" படத்தில் வந்த "நீலவானம்...." பாடலைப் பற்றி கமல் அவர்கள் எங்கே பார்த்தாலும் பேசுவார். இருந்தும், எனக்கான முத்திரை வேறு மாதிரி உருவாகி விட்டது. கடைசியாக வந்த "வீரம்" படத்தில் கூட, சரி பாதிக்கு மெலடி பாடல்கள் இருக்கின்றன. இயக்குநர்கள் விரும்புவதைத்தான் நான் தருகிறேன். மெட்டு போடுவதுதான் நம் வேலை. அதை எப்படி கொண்டு சேர்ப்பது என்பதை இயக்குநர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்...." என்று சிரிக்கிறார்.

"அடுத்து சிம்புதேவன் - விஜய் இணைகிற "புலி" படத்துக்கு இசை நான்தான்... ரிலீஸக்கு முதல் நாள், முதல் ஷோ விஜய் படங்களைப் பார்க்கிறவன் நான். அப்படி ஒரு விஜய் ரசிகன். வரலாற்றுப் பின்னணியில் உருவாகும் கதை "புலி". அதற்கு ஏற்ப இசை வேண்டும் என்று சிம்புதேவன் கேட்டிருக்கிறார். அதற்கென போட்ட சில மெட்டுகளை கேட்டார் விஜய். "நல்லா இருக்கு. உனக்கும் எனக்கும் நல்ல கெமிஸ்ட்ரி உருவாகிடுச்சு" என்று சொல்லி சிரிச்சார். இ-மெயில், எஸ்.எம்.எஸ், ஃபேஸ்புக் என்று விஜய் ரசிகர்கள் துரத்தி துரத்தி வாழ்த்து சொல்லுகிறார்கள். ரொம்பவே சந்தோஷமாக இருக்கிறேன்..."

பென்சிலுக்கு வயது சுமார் 400 ஆண்டுகள். மார்க் போடுவதற்காகத் தீட்டப்பட்ட கரிக்கட்டியிலிருந்து, ஜெர்மனியில் உபயோகத்துக்கு முதன்முதலில் வந்தது அது. 100 ஆண்டுகளுக்கு முன்பு வரை பென்சிலின் கூர்ப்பகுதி சதுரவடிவில்தான் இருந்தது. பின்னர்தான் வட்ட வடிவம் ஏற்பட்டது. பென்சிலைப் பற்றி ஆராய்ச்சி நிபுணர்களுக்குப் புரியாத தகவல் ஒன்று உண்டு. இத்தனை ஆண்டுகளில் அதன் நீளம் மட்டும் மாறவே இல்லை. அமெரிக்காவில் 15,000 வகை பென்சில்களின் தொகுப்பைக் கண்காட்சியில் வைத்திருக்கிறார்கள். எல்லாமே ஏழு அங்குல நீளம்தான்!



# ஏழு அங்குல மர்மம்.

# அனந்தி நீக்கம்: கூட்டமைப்பின் புலிக் களைவு தொடர்கிறது....



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலையிருந்து புலிக் களைவு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிட்டுது எண்டது அனந்தியின்ரை இடைநிறுத்தத்தோடை துலாம்பரமாகுது பாருங்கோ! ஏற்கனவே புலியளின் பிரதிநிதியள் போலை கதையளந்த கஜேந்திரன், கஜேந்திரகுமார், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலை புறக்கணிச்சு, அவையை வெளியாலை போக விட்டவை.

கறை படிஞ்ச கைகளையுடையவர்களோடை தமிழரசுக் கட்சி தொடர்பைப் பேண முடியாது எண்ட கோதாவிலை முதலமைச்சர் விக்கினேஸ்வரன் பேசின பேச்சும் இப்பிடியான நடவடிக்கைகளுக்கு அச்சாரம்தான் பாருங்கோ....

அனந்தி அரசியலுக்கு வந்தது ஸ்ரீதரனாலைதான். கணவன் காணாமல் போனதுக்குப் பிறகு கஜேந்திரன் போன்றவர்களுடன் இணைந்து காணாமல் போனவர்கள் தொடர்பிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அனந்தி பற்றி நன்கு அறிஞ்சிருந்த ஸ்ரீதரன் அவரை தமிழரசுக் கட்சிக்குள்ளை இழுத்தார்.

அனந்தி அந்தக் கால ஆள்பிடிப் பிரச்சாரங்களிலை ஆக்ரோசமாய், உணர்வுகளைச் சுண்டியிழுக்கிற மாதிரிப் பேசின ஒராள். அதிலையும் விடுதலைப் புலியளின்ரை முக்கியஸ்தர்களிலை ஒருத்தரான எழிலன்ரை மனிசி. நல்ல பேச்சாளி எண்டதோடை தமிழ் மக்களின்ரை அனுதாப வாக்குகளை அள்ளிக் குவிக்கக் கூடிய ஒருத்தர். ஒரு கல்லிலை இரு மாங்காய் விழுத்திற மாதிரி அவரை உள்ளுக்கு எடுத்தினை.

அதுமட்டுமில்லை முதலமைச்சருக்கு அடுத்து அதிக வாக்குகளையும் பெற்று கட்சியின்ரை வெற்றியிலை முக்கிய பங்காற்றினார். இதனாலை கட்சியின்ரை மத்திய குழுவிலையும், மகளிர் பிரிவிலையும் முக்கிய இடம் வகித்தார்.

ஆனால் அனந்திக்கு தமிழரசு அரசியல் தெரியாது. அதிலை இருக்கிற சூக்குமங்கள் புரியாது. அங்கை ஒண்டிரண்டு பேர் எடுக்கிற தீர்மானத்துக்கு மாவை உட்பட எல்லாரும் தலையாட்ட வேணும் எண்டதை இவவாலை விளங்கிக் கொள்ளேலாமல் போச்சுது. ஜனநாயகத்திலை நீதிக்காகக் குரல் குடுக்கலாம் எண்டு நினைச்சதாலைதான் இவ கட்சிச் சர்வாதிகாரத்தாலை வெளியேற்றப்பட்டிட்டா. இவவை வெளியேற்றச் சந்தர்ப்பம் பார்த்து இப்ப அது கை கூடி வந்திருக்குது. அவ்வளவுதான்.


அனந்தி சைக்கிளிலை மாகாண சபை அமர்வுக்கு வந்தது, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்தது, அரசாங்கத்துக்கு எதிரான தேவையற்ற பிரேரணையளைக் கொண்டு வந்தது, சிவாஜிலிங்கம் கொண்டு வந்த பிரேரணையளை ஆதரிச்சது, அன்ரனி ஜெகநாதனோடை இணைஞ்சு பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டினது, முதலமைச்சர், அவைத் தலைவர் ஆகியோரின் சர்வாதிகாரத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தது, மைத்திரிபாலவோடை கூட்டுச் சேர்ந்ததுக்கு எதிர்ப்புத் தெரிவிச்சது எண்டு இவவுக்கு எதிராக கட்சிக்குள்ளை கனக்க வெளியிடப்படாத குற்றப் பத்திரிகையள் உள்ளன.

இவவை நீக்கிறதன் முலம் தமிழரசுக் கட்சிக்குள்ளை புதிசாய் சேர்ந்து கொம்பு முளைச்சுத் திரியிற சில பேருக்கும் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்குது. ரவிகரன், அன்ரனி ஜெகநாதன், குணசீலன், சிவாஜிலிங்கம், சிவகரன் ஆகியோர் பகிரங்கமாய் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ரை முடிவைக் கேள்விக்குள்ளாக்கின போதும் அவைக்கு எதிராய் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படேல்லை. தனக்கு மட்டும் ஏன் எண்டது அனந்தியின்ரை கேள்வி.

அதுக்கான பதில் அவருக்குக் கிடைக்காது. அதுதான் உட்கட்சி ஜனநாயகம் பாருங்கோ.

இங்கைதான் புலிக் களைவு எண்டது முக்கியம் பெறுகுது. அதோடை மற்ற ஆக்களுக்கும் இது ஒரு எச்சரிக்கையும் கூட. இது புலிக் களைவிலை தொடங்கி ஆயுத இயக்கங்களின்ரை களைவாக அது நீளுகிற காலம் நீண்டதல்ல. அந்தா தெரியிறது போலைதான் கிடக்குது.

கூடாத கூட்டத்திலை சேர்ந்து, சேர்த்து விட்டவரே இணைஞ்சு படுகுழிக்குள்ளை தள்ளின அவலத்தை நினைத்து அழுகிறதைத் தவிர அந்தப் பேதைப் பெண் என்னதான் செய்ய முடியும்? அவமானப் பட்டு நிற்கிற அவரைக் காப்பாற்ற எந்தக் கிருஸ்ணன் வூருவாரோ?



அதுசரி. வவுனியாக் கூட்டத்திலை ஊழலுக்கு எதிரான கூட்டணியின்ரை ஆட்சி மாற்றத்துக்கு பணமே காரணம் என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் சொல்லியிருக்கிறாரே? அவரை என்ன் செய்ய உத்தேசம்?



# வலிகாமம் கல்வி வலயத்தின் சிறந்த கல்லூரியாக யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி தெரிவு



**அதிபர்**
**இ.ஈஸ்வரதாஸன்**
**B. sc (Biology), PGDE, DSM, MEd, Mphil – SLPS**

## வரலாறு

பழம்பெருமை வாய்ந்த யாழ்ப்பாணத்து கந்தரோடை கிராமத்தில் வந்துதித்த பெரியார் கந்தையா உபாத்தியாயரினாலே 1894ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. 1944ஆம் வருடம் வரை இலண்டன் மெட்ரிக்குலேஷன் பரீட்சைக்காக மாணவர்களை தயார்செய்து வந்தது இக்கல்லூரி 1944ஆம்ஆண்டிலிருந்து 1962 வரையான 18 ஆண்டுகள் இக்கல்லூரியின் பொற்காலம் எனச் சொல்லப்படக்கூடிய காலப்பகுதி. இப்பாடசாலையின் பெருமையும் புகழும் திக்கெட்டும் பரிவிய காலம். திரு. C.சுப்பிரமணியம், வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் கூட்டு முயற்சியினால் பாடசாலை விசேட தரத்திற்கு உயர்ந்தது. இக்காலப்பகுதியில் இப்பாடசாலையிலிருந்து பெருமளவிலான மாணவர்கள் விஞ்ஞான பீடத்திற்கு தெரிவாகிச் சென்றனர். கல்வி மற்றும் விளையாட்டுத் துறையில் இலங்கையில் சிறந்ததொரு கல்லூரியாய் ஸ்கந்தவரோதயா திகழ்ந்தது.



வலிகாம வலயத்தில் சிறந்த அதிபராக இ.ஈஸ்வரதாஸன் தெரிவு செய்யப்பட்டார்.

2014ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் தினத்தையொட்டி யா/இராமநாதன் மகளிர் கல்லூரியில் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் S.சந்திரராஜா அவர்களின் தலைமையில் இடம் பெற்ற வலிகாமம் வலய சாதனையாளர் கௌரவிப்பு விழா வில் வலிகாமம் கல்வி வலயத்தின் சிறந்த கல்லூரியாக யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டதையிட்டு கல்லூரியின் அதிபர், முன்னாள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதனையும், சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட திரு.இராமநாதன் ஈஸ்வரதாஸன் அவர்கள் விருந்தினர்களால் கௌரவிக்கப்படுவதனையும், விழாவில் 2013ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆசிரியர்களையும், படங்களில் காணலாம்.

1998ஆம் ஆண்டிலிருந்து 2008ஆம் ஆண்டுவரை அதிபராக இருந்த சிவாஜி அவர்களுடைய காலத்தில் பாடசாலை பல உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றதோடு, பல மாணவர்கள் கலைப்பீடத் திற்குத் தெரிவாகினார்கள். ஆரம்பப் பாடசாலை உருவாக்கப்பட்டதும், பாடசாலையினுள் முருகன் ஆலயம் அமைக்கப்பட்டதும் இக்காலத்திலேயே. கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாக்கக் கூடிய ஒரு மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதில் இப்பாடசாலை இக்காலத்தில் முன்னின்றது.

இவர்கள் பின் அதிபராகிய திரு. ஆறுதிருமுருகன் மற்றும் திரு ஈஸ்வரதாசன் காலத்தில், பாடசாலை தொடர்ச்சியாக கந்தரோடை கிராமத்திற்கு மட்டுமென்றல்லாது சூழவுள்ள அனைத்து கிராமத்து மாணவர்களுக்கும் கல்விப்பசியாற்றி வருகின்றது தற்போது வலிகாம வலயத்தில் இப்பாடசாலை சிறந்த பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.



செல்வி
**K.கார்த்திகா**
**100m,200m ஓட்ட நிகழ்ச்சியில் 13 வயதுப் பிரிவில் மாகாணமட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்ட இப்பாடசாலை மாணவி**

## இசை (தனி)

தரம் 06 கோட்ட மட்டம் பிரிவு 2 பி.தாட்சாயினி 3ஆம் இடம்
தரம் 09 கோட்ட மட்டம் பிரிவு 2 வி.ரிஷாந்தி 2ஆம் இடம்
தரம் 12 கோட்ட மட்டம் பிரிவு 5 இ.டனுசா 3ஆம் இடம்

**மேடைநாடகம் திறந்த போட்டி**
**நடிகர்களின் விபரம்**

1.செல்வன் தவனேஸ்வரன் தனிஸ்சன்
2. செல்வன் வரதராசா டிலக்சன்
3.செல்வன் குணபாலன் டயான்
4. செல்வன் முருகமூர்த்தி விதுசன்
5. செல்வன் ரவிக்குமார் பிரவீணன்
6. செல்வன் செல்வராசா ஜெயகாந்தன்
7. செல்வி அருந்தவராசா அனுசியா
8. செல்வி ஜெகதீஸ்வரன் தர்சியா
9. செல்வி சிவசுப்பிரமணியம் டசிந்தா
10. செல்வி விஜயகுமாரன் மயூரி
11. செல்வி பிலேந்திர குமார் நளாயினி
பொறுப்பாசிரியர் சி. சதீஸ்

வாரம் ஒரு பாடசாலை

**பாடகர்கள்**

1. செல்வி சகாயம் எனோசியா (மாணவி)
2. செல்வி நடராசா சுகன்யா (மாணவி)

இவ்வருடம் மெய்வல்லுநர் வலையமட்டப் போட்டியில் வெற்றி ஈட்டி மாகாண மட்டத்தில் பங்குபற்றத் தகுதி பெற்றோர்.

| | | |
|---|---|---|
| ரி. சுகந்தன் | முப்பாய்ச்சல் | 1ஆம் இடம் |
| | 200m | 2ஆம் இடம் |
| | 400m | 1ஆம் இடம் |
| எஸ்.விதுசா | 100m | 1ஆம் இடம் |
| | 200m | 1ஆம் இடம் |
| கே.கார்த்திகா | 100m | 1ஆம் இடம் |
| | 200m | 1ஆம் இடம் |
| பி.சயந்தன் | 400mhurdles | 2ஆம் இடம் |
| ரி.சசிகரன் | 400mhurdles | 2ஆம் இடம் |
| ரி.சிந்துஜன் | 1500m | 2ஆம் இடம் |
| | 800m | 3ஆம் இடம் |
| | முப்பாய்ச்சல் | 2ஆம் இடம் |
| எஸ்.றஞ்சினி | 5000m | 1ஆம் இடம் |
| | 1500m | 2ஆம் இடம் |
| | 800m | 2ஆம் இடம் |
| எஸ்.சுரேக்கா | 5000m | 2ஆம் இடம் |
| எஸ்.அஜித்குமார் | 400m | 2ஆம் இடம் |
| கே.கீர்த்தனா | தட்டெறிதல் | 1ஆம் இடம் |
| 17வய்து பெண் 4X400 அஞ்சல் | | 2ஆம் இடம் |

**விஞ்ஞான வினாவிடைப்போட்டி**
**மாகாண மட்டம் (ஆங்கில மொழி மூலம்)**

| | | |
|---|---|---|
| பா.சானுசா | தரம் 07 | 2ஆம் இடம் |
| கோட்ட மட்டம் | | |
| பா.காண்டீபன் | தரம் 11 | 2ஆம் இடம் |
| ர.லோகிதா | தரம் 10 | 2ஆம் இடம் |

**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**தமிழ்த்தினப் போட்டி - 2014**

1) தமிழியற்கட்டுரைப்பிரிவு V செல்வி க.கஜானா (தரம்-13) கோட்ட மட்டம் 1ஆம் இடம்
வலய மட்டம் 1ஆம் இடம்
மாகாண மட்டம் 3ஆம் இடம்
2) திறனாய்வு பிரிவு V செல்வி பு.டிவின்சிகா தரும் 13)
கோட்ட மட்டம் 1ஆம் இடம்
3) சிறுகதை ஆக்கம் பிரிவு iV செல்வி ச.சத்திதரணி தரம்.13)
கோட்ட மட்டம் 2ஆம் இடம்
4) சிறுகதை ஆக்கம் பிரிவு - V செல்வி அ.கஸ்தூரி தரம் 13)
கோட்ட மட்டம் 2ஆம் இடம்
5) இலக்கணப்போட்டிப் பிரிவு iV செல்வி.ர.லோகிதா (தரம்-11)
கோட்ட மட்டம் 3ஆம் இடம்)
6) பாவோதல் பிரிவு 11 வி.புருசோத்மன் (தரம் 7A)
கோட்ட மட்டம் 3ஆம் இடம்
7) பேச்சு பிரிவு V த.நிறோசன் தரம் -12)
கோட்ட மட்டம் 3ஆம் இடம்
வி.றிஷாந்தி தரம் 9 பிரிவு iV கோட்டம் 2ஆம் இடம்
8) தனியிசை பிரிவு 11 பி.தாட்சாயினி (தரம் 6A)
கோட்ட மட்டம் 3ஆம் இடம்
9) தனியிசை பிரிவு V இ.தானுஷா (தரம் 12)
கோட்ட மட்டம் 3ஆம் இடம்
10) நாட்டிய நாடகம் (நளவெண்-பாசுயம்வர காண்டம்) 3ஆம் இடம்

| | | | |
|---|---|---|---|
| 01.கு.நிலாந்தினி | தரம் 13 | 02.க.நிஜிதா | தரம் 12 |
| 03.த.கௌசிகா | தரம் 12 | 04.சு.நிவேதிகா | தரம் 12 |
| 05.சி.கயலினி | தரம் 11 | 06.ச.சக்திதார்ணி | தரம் 11 |
| 07.ம.பவதாரணி | தரம் 11 | 08.தெ.கௌசிகா | தரம் 11 |
| 09.தி.கஜனி | தரம் 11 | 10.கு.கீர்த்தனா | தரம் 10 |
| 11.அ.அஜித்தனா | தரம் 10 | 12.பா.சாணுஜா | தரம் 08 |



பாடசாலை ஆசிரியர்கள்



நாடகத்தில் தேசிய மட்டத்திற்குச் சென்ற மாணவர்களுடன், அதிபரும், பொறுப்பாசிரியர்களும். - 2014



மாணவ தலைவர்கள்

# உடுப்பிட்டி மல்லந்தரை கிராம மக்கள் அடிப்படைவசதிகளின்றி தவிப்பு



உடுப்பிட்டி மல்லந்தரை ஜே/352 கிராம அலுவலர் பிரிவில் வாழும் மக்கள் தங்கள் கிராமத்திற்கு அடிப்படைவசதிகள் எதுவும் பூர்த்தி செய்யபபடவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்திற்கான பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் நடைபெற்றன. இதில கிராம மக்கள் கலந்துகொண்டு தமது குறைப்பாடுகள் குறித்து தெரியப்படுத்தினர்.

இதன்படி இக்கிராம மக்கள் தமது கிராமத்திற்கு இதுவரை மின்சார வசதிகள் வீதிப்புனரமைப்பு என எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

இதனால் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் இக்கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இக்கிராமத்தில் 80 குடும்பங்கள் வசித்துவரும் நிலையில் மின்சார தேவை என்பது மிக்க அத்தியாவசியமாக உள்ளது என சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை தமது கிராமத்தின் குறைபாடுகள் தொடர்பில் கரவெட்டி பிரதேச செயலாளருக்கும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கும் தெரி யப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் குடிநீர் வசதிகளும் ஏற்படுத்தப்படாது மக்கள் குடிநீரின்றி தவிக்கும் அவல நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இக்கிராம மக்களின் அத்தியாவசிய தேவையான மின்சாரம் மற்றும் குடிநீர்தேவை ஏற்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் இதன் போது கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் இக்கூட்டத்தில்நிர்வாக சபை தெரிவில் தலைவராக இ.விக்கினராஜா, உபதலைவராக இ.உதயகுமார், செயலாளராக இராசு ரூபன், உப செயலாளராக எஸ். ஜெயகீதா, பொருளாளராக த.தர்சினி மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 6பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(18)

## நினைவுக் கூட்டமும் நூல்வெளியீடும்


பொதுவுடைமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடி தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 25ஆவது வருட நினைவுக் கூட்டமும் அவர்பற்றிய "தோழர் மணியம் நினைவுகள்" நூல்வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் இல.62, கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இ.தவராஜா தலைமை தாங்க க.தணிகாசலம் வரவேற்புரையை வழங்குவார் சி.கா.செந்திவேல் எழுதிய தோழர் மணியம் நினைவுகள் எனும் நூல் வெளியிடப்படும்.

முதற்பிரதியை திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் வழங்குவார். அதனை மூத்ததோழர் இ.செல்வநாயகம் பெறுவார். மேற்படி நூலினை எம்.இராசநாயகம் ஆய்வுரை செய்வார். நினைவுப் பேருரையை இன்றைய தமிழ்ச்சூழலில் மாற்றுச் சிந்தனையின் அவசியம்" எனும் தலைப்பில் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின முதுநிலை விரிவுரையாளர் ந.பார்த்தீபன் ஆற்றுவார் கருத்துரைகளை வெ.மகேந்திரன், ச.தனுஷன், சொ.தேவராஜா வழங்க நன்றியுரையினை கா. செல்வம் கதிர்காமநாதன் வழங்குவார்.

## வெள்ளி நற்சிந்தனை...



### பெற்றோரும் பிள்ளைகளும் - 01

**தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மா நிலத்து**
**மன் உயிர்க்கு எல்லாம் இனிது - குறள் 68**

தம்மைவிடத் தம் மக்கள் கல்வி அறிவு உடையவராகத் திகழ்வது இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் இன்பம்பயப்பதாகும். பெறுகின்ற பேறுகள் பல் : அவற்றுள் சிறந்த பேறு அறிவு நிரம்பிய மக்களைப் பெறுவதுவே யாகும். தம்மைக் காட்டிலும் தமது மக்கள் அறிவுடையவராக இருந்தால் அது கழிபேருவகை விளைவிககின்றது.

தாய், தந்தையர் நல்ல நோன்புகள் நோற்று, இறைவழிபாடு செய்து நன் மக்களைப் பெறுதல் வேண்டும்.

புகைப்படம் பிடிக்கின்றவர்கள் தம்மை நன்கு அழகு செய்து கொண்டு தானே படம் பிடித்துக் கொள்கின்றார்கள். உயிரில்லாத படத்திற்கு அப்படி என்றால் மக்கள் உயிருள்ள படங்கள் அல்லவா? ஆகவே மக்களைப் பெறுகின்றவர்கள் தாம் மனமொழி மெய்களினால் தூயவராக நின்றால் தான் நன் மக்கள் தோன்றுவர். ஒரு பண புடைய மகன் பிறந்தால், பிறந்த நாடு, நகரம், அந்தக்குலம், குடும்பம் அனைத்தும் தழைக்கின்றன.

மக்களைப் பெற்றோர் மிகவும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது ஒன்றுள்ளது. பயிர் வளர்க்கின்றவர்கள் நீரும் உரமும் இடுவது போல் மக்களை வளர்க்கின்றவர்கள் அறிவுரைகளை அவ்வப்போது இனிமையாக மக்களுக்குப் புகட்ட வேண்டும். தாய் தந்தையர் முதலில் அறநெறியில் நிற்க வேண்டும்.

காரில் பயணஞ் செய்யும் முதலாளிகள் காா ஓட்டுநருக்கு காது உண்டு என்று எண்ணாமல் மறைமுகமாகவுள்ள சில குடும்பக் கதைகளைப பேசுவார்கள். அது போல் தம் வீட்டில் வளரும் குழந்தைகளுக்கும் காதும் அறிவும் உண்டு என்ற எண்ணம் வேண்டும். அக் குழந்தைகள பெரியவர்களுடைய நடையுடைகளைக் கூர்மையாக கவனிக்கின்றார்கள் என்பதை மறவாமல் சிந்திக்க வேண்டும்.

ஒரு தந்தை தம் இளம் மைந்தனைப் பார்த்து 'கண்ணா! கந்தசாமி வந்து அப்பா எங்கே என்று கேட் டால் இல்லை என்று கூறு' என்று கூறுகின்றார். தம் மகனுக்குத் தந்தையே பொய் சொல்லக் கற்றுக் கொடுக்கின்றார். தந்தை கற்றுக் கொடுத்த பொய்யை மைந்தன் சில சமயம் தந் தையிடமே கூறத் தொடங்கி விடுகின்றான். "ஏன்டா பொய் சொல்லலாமா" என்று தந்தை அவனைப் பின்னர் கண்டிக்கின்றார். இது பிழை.

ஒரு தாய் தன் கணவனிடம் எதிர்த்து மரியாதைக் குறைவாகப் பேசுவாளாயின், அவளுடைய மகள் இதனைப் பிடித்துக் கொண்டு தன் கணவனிடம் தாமும் அவமரியாதையாகப பேசுவாள். அதனால் தான் "தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை." என்ற பழமொழி ஏற்பட்டது.

ஆதலால், மக்களை வளர்க்கும் தாய், தந்தையர் மக்கள் பொருட்டாவது மிக மிக நேர்மையாகவும், சீலமாகவும் நடந்து கொள்ளவேண்டும். நல்ல சூழ்நிலையில் வளர்ந்த பிள்ளைகள் தங்கள் ஆயுள் வரை ஒழுக்கமாக இருப்பார்கள்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

## பதிவிருக்கப் பெட்டகம்

1959இல் வெளிவந்த கல்யாணப் பரிசு படம் கல்லூரி வாழ்க்கையை ஒரு முக்கிய பகுதியாகக் கொண்ட படம். கல்லூரியில் படிக்கும் வயதை எப்போதோ தாண்டிய நடிகர்கள் அதில் மாணவர்களாக நடித்திருந்தார்கள். ஜெமினி கணேசன் சினிமாவிற்கு வருவதற்கு முன்னரேயே ஒரு கல்லூரியில் ஆசிரியராக வேலை பார்த்தவர். ரசிகர்கள் இதையெல்லாம் எப்பொழுதும் பெரிதுபடுத்துவதில்லை. **– அம்ஷன் குமார்**

கம்யூனிஸம் பற்றி கத்தி திரைப்படத்தில் ஒரே வரியில் எளிமையாக விளக்குகிறாராம் விஜய். கார்ல் மார்க்சும் ஏங்கெல்சும் தலையணை தலையணையாக புத்தகம் எழுதி நேரத்தை வீணடித்த பாவத்தை இதில் விஜய் கடந்திருப்பதாக சொல்கிறார்கள். அது 'நம் பசி தீர்ந்த பிறகு, நாம் சாப்பிடுகிற ஒவ்வொரு இட்லியும் இன்னொருவருடையது. இதுதான் கம்யூனிசம்' என்பது.

இருக்கிற இட்லியை இருக்கிற அனைவருக்கும் பகிர்ந்தளிப்பது கம்யூனிஸமா அல்லது தனக்குப் பின்புதான் தானம் தருமம் என்கிற பழமொழி போல முதலாளித்துவ வாடை அடிக்கிற இந்த வசனமும் கம்யூனிஸம்தானா என்று குழப்பமாக இருக்கிறது. பசி தீர்ந்த பிறகு என்றால்,பசி எப்போது தீரும என்பதும் பிரச்சினைதானே என்கிற தத்துவார்த்த வெளிகளுக்கும் இட்டுச் செல்கிறது இந்த வசனம். **–சுரேஷ் கண்ணன்**

சிவாஜி கணேசன் எந்தளவுக்கு மிகையான நடிப்புக்கு உதாரணமோ அந்தளவுக்கு எதார்த்தமான நடிப்புக்கும் உதாரணம். அவர் காலத்து நடிகர்கள் நடித்த காட்சிகளை எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால் சிவாஜி எதார்த்தத்தோடு நடித்த எத்தனையோ மிகச் சிறந்த காட்சிகளைச் சொல்லமுடியும். அது எப்போது மிகையாக மாறுகிறது என்பதற்குப் பின்னால் எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. ஒரு நல்ல உதாரணம் சொல்லவேண்டுமென்றால் 'தில்லானா மோகனாம்பாள்' படத்தின் இரண்டு பாடல் காட்சிகள்.

'மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன?' பாடலில் சிவாஜியும் பத்மினியும் காட்டும் முகபாவனைகளும் உணர்வுகளும் அவ்வளவு அற்புதமானவை; இயல்பானவை. ஆனால் 'உடலும் உள்ளமும் நலந்தானா?' பாடல் காட்சியில் அப்படியே இருவரின் நடிப்பும் நாடகப் பாவனைகளாக மாறிப்போகின்றன.

**– சுகுணா திவாகர்**

பெண்கள் விஷயத்தில் எம்.ஜி.ஆரைப் பற்றி 'வாய்மொழி வரலாறாக' எவ்வளவோ தகவல்கள் உண்டு. சில நம்பகமான மனிதர்கள்கூட அத்தகைய சம்பவங்களை, நாம் நம்பக்கூடிய ஆதாரங்களோடு சொல்லியிருக்கிறார்கள். நான் எதையுமே நம்பமாட்டேன். அதாவது நம்ப விரும்பமாட்டேன். இந்த விஷயத்தில் பகுத்தறிவுக்கு எல்லாம் 'லீவு' போட்டுவிடுவேன். எம்.ஜி.ஆர் விஷயத்தில் மட்டும் நான் ஆத்திகன். அவர்தான் கடவுள். சினிமாவில் அவர் காட்டிய 'ஒழுக்கப் பிம்பம்' அவ்வளவு நேர்த்தியானது. அது உண்மையென்று நம்பக்கூடிய அளவுக்கு மனசுக்கு நெருக்கமானது.

எட்டாவது வயதில்தான் 'உலகம் சுற்றும் வாலிபன்' முதன் முறையாக பார்த்தேன். 'பச்சைக்கிளி முத்துச்சரம்' பாடல் முடிந்ததுமே, பேரழகியான அந்த தாய்லாந்து யுவதி (14 வயது; தலைவரின் வயது அப்போது 55) நீச்சல்குளத்தருகே ஓடிவந்து தன் காதலை தெரிவிப்பார். ஓரிரு நிமிடங்களுக்கு முன்பாக பாடலில் இஷ்டத்துக்கும் புகுந்து விளையாடிய தலைவரோ, அசால்டாக வலக்கையில் (வாத்தியார் இடதுகைப் பழக்கம் கொண்டவர்) அந்தக் காதலை நிராகரிப்பார். கூடுதல் அதிர்ச்சியாக 'தங்கச்சி' என்று விளிக்க, தாய்லாந்து அவரைக் கட்டிக்கொண்டு கண்ணீர் உகுக்க, சட்டென்று படம் 'பாசமலர்' ரேஞ்சுக்கு காவியமாகி விடும். கடந்த முப்பது ஆண்டுகளாக அந்தப் படத்தை கிட்டத்தட்ட நூறுமுறை பார்த்தாகிவிட்டது. பைத்தியம் மாதிரி ஒரே படத்தை ஏன் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்றால், எம்.ஜிஆர் தாய்லாந்திடம் காட்டிய அந்த 'ஆண்மையான' ஒழுக்கம்தான். சந்திரகலாவுக்காக மட்டுமே தன் கற்பை போற்றிப் பாதுகாப்பதும், தன் காதலன் என்று நினைத்து மஞ்சுளா கட்டியணைக்க ஓடிவரும்போது, 'அண்ணீ, நான் ராஜு. முருகனோட தம்பி' என்று பதறி விலகுவதுமாக– 'மனுஷன்னா இவன்தான்யா' என்று அந்த வயதிலேயே தோன்றியது.

பெண்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சுயக் கட்டுப்பாடுகளை விதித்துக்கொள்ள எம்.ஜி.ஆரின் திரைப் படப் பாத்திரங்கள்தான் ரோல்மாடல் ஆனது.

**– யுவகிருஷ்ணா**

# நாடுகளுடன் பாரபட்சமாக இலங்கை செயற்படாது

## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

எந்தவொரு நாட்டுக்கு சார்பாகவும் எந்தவொரு நாட்டுக்கு விரோதமாகவும் இலங்கை செயற்படாது என புதிய அரசாங்கம் அறிவித்துள்ளது.


தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டங்களை இலங்கையின் புதிய அரசாங்கம் இரத்து செய்யாது என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீன தூதுவர் வூ ஜியன்வாவோவுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எந்தவொரு நாட்டையும் விரோதமாக பார்க்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய அனைத்து உலக நாடுகளுடனும் கைகோர்த்துக்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

ஆசிய பிராந்திய வலயத்தின் முக்கிய நாடுகளாக சீனாவும், இந்தியாவும் திகழ்கின்றன எனவும் இரண்டு நாடுகளுடனும் சுமூகமான உறவுகளைப் பேணி பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். சீனாவுடனான உறவுகளின் போது ஏற்படக் கூடிய பாதகமான நிலைமைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# பதாகைகளுடன் கழுதைகள்



(வவுனியா)

வவுனியாவில் வீதிகளில் திரியும் கழுதைகள் மன்னார் டு வவுனியா என்ற பதாதைகளை அணிந்தவாறு நடமாடித் திரிவதை அவதானிக்க முடிகின்றது.

மன்னார் மாவட்டத்தில் அதிகமாக காணப்பட்ட கழுதைகள் தற்போது வவுனியா மாவட்டத்துக்கும் வருகை தரத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக வவுனியாவின் நகரப்பகுதிகளில் சுதந்திரமாக சுற்றித்திரியும் கழுதைகள் வீதிப்போக்குவரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன.

இந் நிலையில் இளைஞர் குழுவொன்று கழுதையை பிடித்து மன்னார் டு வவுனியா (மன்னாரில் இருந்து வவுனியா) என்ற பதாதையை கட்டிவிட்டுள்ளது..

## அதிவேக வீதியில் விபத்து

கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற விபத்தில் மூவர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வத்தளை பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் மற்றும் ஜீப் வண்டி ஒன்றோடு ஒன்று மோதியதனால் இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களே விபத்தில் காயமடைந்துள்ளனர். மேலும் ஜீப் வண்டி சாரதியை வத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர.

இதேவேளை நேற்று முன்தினம் மிகிந்தலைப் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

## தவறான வழக்கு பொலிஸாருக்கு எச்சரிக்கை

(கிளிநொச்ச)

தவறான முறையில் வழக்கொன்றைப் பதிவு செய்து, ஒருவர் மீது குற்றச்சாட்டு முன்வைத்தமைக்கு பளைப் பொலிஸாரை கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன், எச்சரிக்கை செய்தார்.

பளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், தனது மற்றும் தனது உறவினர் காணிகளிலுள்ள பனை மரங்களை வெட்டுவதற்கான அனுமதியை பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தில் பெற்று, மரங்களை தறித்து, தனது வீட்டு வளவில் வைத்துள்ளார்.


இந்த நிலையில், பனை மரங்கள் வைத்திருப்பதற்கான அனுமதியை வைத்திருக்கவில்லையெனக் கூறிய பளை பொலிஸார், தறிக்கப்பட்ட பனை மரங்களை கைப்பற்றியதுடன், தறித்து வைத்திருந்தவருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

குறித்த வழக்கு, நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தறித்து வைத்திருந்தவர் தனது பக்க நியாயத்தை சட்டத்தரணியூடாக நீதிமன்றத்தில் கூறினார்.

பனை மரங்கள் தறிப்பதற்கான அனுமதியுடன் வைத்திருப்பதற்கான அனுமதியும் உண்டு என்பதை ஏற்றுக்கொண்ட நீதவான், அவ்வாறு அனுமதியில்லையென்பது எந்தச் சட்டத்தில் உள்ளது என்றும், அதனை காண்பிக்குமாறும் பளைப் பொலிஸாரிடம் வினாவினார்.

இவ்வாறான பொய் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வழக்குத் தாக்கல் செய்யக் கூடாது என உத்தரவிட்ட நீதவான், பனை மரங்களை உரிமையாளரிடம் மீண்டும் ஒப்படைக்கும் படியும் உத்தரவிட்டதுடன், வழக்கை தள்ளுபடி செய்தார்.

# பரமர் சங்கமம்



'உடைத்த கல்லில் ஒன்று கோவில் ஒன்று தெய்வம் ஒன்று வாசல்' கண்ணதாசனின் சினிமாப்பாடல் வரிகள் அது. நல்ல தத்துவத்தை உணர்த்தும் கருத்தை இப்ப தேர்தல் முடிந்த பின்னாலை பரமரைத் திரும்பிப் பாக்கச் செய்தது; முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் நீதிமன்றப் புகுதல்தான்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தர் இன்னாள் ஜனாதிபதி மைத்திரியர் முன்னாள் அமைச்சரும் இன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மேர்வின் சில்வா இம்மூவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்னும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளெண்டே சொல்லி விடலாம்.

எண்டாலும் மூவரையும் தகுதி நிலையில் ஒப்பிடுறேண்டா உந்த உடைச்ச கல்லுத்தத்துவத்தைக்கையில் எடுக்கலாம். இப்போதைக்கு மைத்திரியாரைத் தெய்வமாகவும் மகிந்தரைக் கோவிலாகவும் மேர்வினை வாசலாகவும் உருவகித்துக் கொள்ளலாம்.

ஏனெண்டால் மைத்திரியர் வந்தது வராமல் மேற்கொண்டிருக்கும் வேலைகள் தெய்வமாகவே அவரைப் பாக்க வைக்குது. மகிந்தர் கோவிலாக் கூடப் பாக்க முடியாமல் காலம் மாறிக் கொண்டிருக்குது வாசலுக்கு மேர்வின் மிகப் பொருத்தமாகவே காணப்படுகிறார் நீதிமன்றத்துக்குப் போயுள்ள அவரின் வந்த வழிச் சுவட்டைத் திரும்பிப் பார்த்தால் புரியும்.

சிலாபம் முன்னேஸ்வரம் ஆலய வேள்விப் பூசையில் கரடியாக நுழைந்து ஆடு. கோழி எண்டு பலியிடக்கொண்டு வந்திருந்த வாய் பேசாப் பூச்சிகளை மீட்டுடப் போய் சமைச்சுச் சாப்பிட்டது. இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமைகள் அதிகாரி பெண்ணாக அதுவும் தமிழிச்சியாக இருக்கக் கல்யாணம் செய்ய ஆசைப்படுவதாகப் புலம்பியது. சிங்கள நடிகை கீதா குமாரசிங்கவையும் கூட்டமொண்டில் கண்டு சபலத்தால் பொச்சடித்தது போன்ற சம்பவங்களால் நாட்டுக்கும் வெளியே புகழ் பெற்றிருக்கும் காரணங்கள் தகைமை சேர்க்கின்றன.

ஊடகவியலாளர் லசந்த கிருணிகாவின் தந்தை பாரதரத்னா கொலைகள் வெள்ளைவான் கலாசார செயல்கள் அனைத்துக்கும் கோத்தபயவும் பணச்சுத்திகரிப்புக்களுக்கு பஷிலுமே காரணதாரிகளெண்டு மேர்வின் வழக்குத் தாக்கல் செய்திருக்க ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி அது சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ளாமல் இவரின் கருத்தை ஏற்க முடியாதெண்டும் மேர்வினிடம் குவிந்து கிடக்கும் குற்றச் செயல்களையும் விசாரிக்க வேண்டு மெண்டும் கேட்டுள்ளார்.

இந்த பிணக்குகளை ஊடகங்களிலை பாக்கேக்கை ஆரோ ஒருவர் எதிரணியில் சேந்தவையெல்லாம் தூயவர்களா எண்டு கேட்டதும் ஞாபகத்துக்கு ஒழுவளுது ஆரிடிச்சாலும் அரிசியெண்ட காலம்போய் ஆர்குத்தினாலும் கொலை எண்ட காலம் வந்தாலும் ஆச்சரியப்பட முடியாது.

கொஞ்ச நாளா எவரென்ன செய்தாலும் கேள்வி யல்லை எனடமாதிரி நீதி செய்த்துப் போய்க்கிடந்து. சாத்திரங்களை நம்பிய தலைவர் மக்களை நம்பாத தையும் கண்டம் மக்கள் சக்தி மகோன்னத சக்தி யெண்டதையும் உணர்ந்தம்.

'கல்லைக் கண்டால் நாயைக் காணோம் நாயைக் கண்டால் கல்லைக் காணோம்' எண்டோபோலை கல்லெது நாயெதெண்டதை நாங்கதான் கண்டும் பிடிக்கவேணும் இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்....

# மானிய ஆணைக்குழு தலைவர் பதவி விலக வேண்டும்

## விரிவுரையாளர் சங்கம் போர்க்கொடி



(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தனது பதவியிலிருந்து உடனடியாக விலக வேண்டும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரது நியமனம், தகுதிக்கு ஏற்றவாறு வழங்கப்பட்டதொன்று அல்லவென பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த கலாநிதி நிர்மல் ரஞ்ஜித் தேவசிறி தெரிவித்தார்.

அத்துடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் முந்தைய அரசாங்கத்தின் பிரசார கடமைகளின் ஊடாக தமது பதவியைப் பயன்படுத்தி தேர்தல் காலத்திலும், ஏனைய காலப் பகுதிகளிலும் செயற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

எனவே, அவரின் கீழ் தொடர்ந்தும் பல்கலைக்கழக கட்டமைப்பு செயற்படுவதை அனுமதிப்பதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் தயாராக இல்லை எனவும் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என தாம் வலியுறுத்துவதாகவும் கலாநிதி நிர்மல் ரஞ்ஜித் தேவசிறி குறிப்பிட்டார்.

## இரவல் தாலிக்கொடியை அடகுவைத்து ஏமாற்றியவருக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)



பெண்ணொருவரின் தாலிக் கொடியை வாங்கி அடகு வைத்து, ஏமாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தேகநபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைககுமாறு சாவகச்சேரி நீதவான நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.


கொடிகாமம், குடமியன் பகுதியை சேர்ந்த பெண்ணிடம் 3 பவுண் தாலிக்கொடியை இரவல் வாங்கிய நபர், அதனை வங்கியொன்றில் அடகு வைத்துப் பணம் எடுத்துள்ளார்.


தாலிக்கொடி கொடுத்த பெண், தாலிக்கொடியை திரும்பக்கேட்டபோது, சந்தேகநபர் அதனை திருப்பிக் கொடுக்காது ஏமாற்றி வந்துள்ளார்.


கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட பெண் கடந்த திங்கட்கிழமை செய்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேகநபரை நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்து நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்ப்படுத்தினர்.


36. ஆசிரியர் ஒருவர் தொடர்பான தவறான கருத்து எது?
1. அவர் மாணவர்களுடன் அன்போடு பேசும் ஒருவராவார்
2. அவர் மாணவர்களைத் தண்டிக்கும் குணமுடையவராவார்
3. அவர்மாணவர்கள் கற்பத்ற்கு வழிகாட்டும் ஒருவராவார்

பின்வரும் உருக்களில் பொருத்தமில்லாத உருவைத் தெரிவுசெய்க

37.

(01) (02) (03) (04)

38.

(01) (02) (03) (04)

39.

(01) (02) (03) (04)

40.

(01) (02) (03) (04)

பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக

41. உறையுள் ........................ 42. அங்கி ........................
43. நிர்மாணித்து ........................ 44. விநோதம் ........................

பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களைப் பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக

45. கவனம் ........................ 46. பகைவன் ........................
47. விரும்பிய ........................ 48. பட்சிகள் ........................

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

1.2 2.2 3.2 4.2 5.1 6.2 7.1 8.1 9.3 10.2 11.1 12.1 13.3 14.2
15.2 16.2 17.1 18.3 19.3 20.2 21.நிருபர் 22.களவெட்டி 23.விருந்தினர் 24.அரிசி
25.விகடகவி 26.அரசன் 27.மலர் 28.சந்திரன்
29.ஔடதம் 30.தர்மம் 31.தந்திரம் 32.50ரூபா
33.4 34.140ரூபா 35.13 36.745ரூபா 37.3 38.4 39.3 40.3 41.2 42.1 43.4
44.3 45.3 46.1 47.4 48.4 49.2 50.1 51.சரி 52.பிழை 53.பிழை
54.பிழை 55.சரி

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**




## தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2015


பகுதி - I
1மணி 15நிமிடம்





# கல்வி முரசு


மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கோடிடுக
முதலில் உள்ள இரு உருக்களையும் அவதானித்து அடுத்துவரக்கூடிய உருவைத் தெரிவு செய்க

1.


2.


3.



4.


5.


6ஆம், 7ஆம் வினாக்களில் தரப்பட்ட உருவுக்குப் பொருத்தமான சொற்கூட்டம் கொண்ட விடையைத் தெரிவு செய்க

6.

1. உழைப்பு, உற்சாகம், மதிப்பு
2. வறுமை, உழைப்பு, நோய்
3. வறுமை, முதுமை, தருமம்

7.

1. பயணம், ஆகாயம், விரைவு
2. பயணம், மகிழ்ச்சி, பிரிவு
3. ஆகாயம், செலவு, பிரிவு

8. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தும்போது பெறப்படும் சம்பவத்தைக் குறிக்கும் இலக்கங்களின் வரிசை எது?

1. இரு வாகனங்களும் ஒன்றையொன்று மோதின
2. பஸ்வண்டி வேகமாக வந்துகொண்டிருந்தது
3. பாதையின் குறுக்கே மாடொன்று பாய்ந்தது
4. விபத்துக்குள்ளானோர் கூக்குரலிட்டனர்
5. அதற்கு எதிர்ப்புறமாக கார் ஒன்றும் வந்தது

1. 3 2 5 1 4
2. 2 3 5 4 1
3. 2 5 3 1 4

9. சுவர்க்கடிகாரமொன்றில் மிகத் தாமதமாக அசைவைக் காட்டுவது
1) நிமிட முள் 2) மணித்தியால முள் 3) செக்கன் முள்

10. கடற்கரையோரம் ஒன்றில் எப்போதும் காணக்கூடியது
1) சிப்பிகள் 2) மணல் 3) மீன்கள்

11. சமையலறை ஒன்றில் எப்போதும் இருக்க வேண்டியது
1) அடுப்பு 2) பாத்திரங்கள் 3) மேசை

12. பளபளப்பு கூடிச் செல்லும் ஒழுங்கில் அமைந்த உலோகங்களின் கூட்டம்
   1) தங்கம் வெள்ளி வெண்கலம்
   2) வெள்ளி வெண்கலம் தங்கம்
   3) வெண்கலம் வெள்ளி தங்கம்

13. பாதையொன்றில் எப்போதும் காணப்படக்கூடியது
   1) மஞ்சள்கோடு   2) தார்   3) நிலம்

14. மேடை, ஒலிபெருக்கி, பேச்சு - இவ்விடயங்களுக்கு மிகவும் பொருத்தமுடைய நபர்
   1) பாடசாலை அதிபர்   2) பேச்சாளர்   3) பாடகர்

15. கத்தரிக்கோல், துணி, அளவுநாடா - இவற்றுக்கு மிகவும் பொருத்தமுடைய நபர்
   1) தையலர்   2) ஓவியர்   3) ஆசிரியர்

16 - 20வரையிலான வினாக்களுக்காக கூட்டற் கணிதச் செய்கையொன்று தரப்பட்டுள்ளது. அதில் இலக்கங்களுக்குப் பதிலாக ஆங்கில எழுத்துக்கள் இடம்பெறுவதோடு இறுதிவிடை இலக்கங்களில் உள்ளது. இங்கு A யின் பெறுமானம் 2 ஆகும்.

```
  D C B A
+ E A E D
  6 3 5 7
```

16. D யின் பெறுமானம் யாது?
   1. 4   2. 3   3. 5

17. D யின் பெறுமானம் யாது?
   1. 3   2. 2   3. 1

18. E+E யின் பெறுமானம் யாது?
   1. 10   2. 6   3. 2

19. C+B யின் பெறுமானம் யாது?
   1. 7   2. 6   3. 5

20 C+A யிற்குச் சமமாக இருப்பது எது?
   1. D+E   2. B+E   3. A+D

21. அமுதனின் வீட்டு முன்னால் சென்று கொண்டிருந்த ஒருவரை நாய் ஒன்று கடித்துவிட்டது. நாய் அமுதனின் வீட்டு நாய் அல்ல. கடிபட்டவரை அமுதன் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று முதலுதவி செய்து வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றான். இச்செயலானது அமுதனின்
   1. நன்றி மறவாத குணம் ஆகும்   2. இரக்க குணம் ஆகும்
   3. உதவியை எதிர்பார்க்கும் குணம் ஆகும்

22. நான்காம் வகுப்பில் படிக்கும் கமன் ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் காலையில் அம்மா எழுப்பும் போது வயிற்றுவலி அல்லது தலைவலி என்று நோய் சொல்வான். சனி, ஞாயிறு தினங்களில் அவனுக்கு அத்தகைய வருத்தம் வருவதில்லை. காலையில் மழை பெய்வதென்றால் சுமன் அதிக மகிழ்ச்சி அடைவான். கமனைப் பற்றிச் சொல்வதாயின் அவன்
   1. நோயினால் அவதிப்படும் ஒரு சிறுவனாவான்
   2. மழையில் நனைவதற்கு விருப்பமுடையவன்
   3. பாடசாலை செல்வதற்கு விருப்பமில்லாதவன்

பின்வரும் எண்கோலங்களை அவதானித்து வெற்றுக்கட்டத்துக்குள் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 23. | 2 | 4 | 8 | ............ | 1. 10 | 2. 12 | 3. 16 |
| 24. | 776 | 665 | 554 | .......... | 1. 332 | 2. 443 | 3. 445 |





25ஆம், 26ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சோடிச்சொற்களின் தொடர்பைப் புரிந்துகொண்டு பொருத்தமில்லாத சோடிச்சொல்லைத் தெரிவுசெய்க

25. 1. பிரச்சினை - தீர்வு   2. இலகு - கடினம்   3. முயற்சி - வெற்றி
26. 1. கீர்த்தி - அபகீர்த்தி   2. மங்கலம் - அவமங்கலம்   3. தந்திரம் - மந்திரம்

27. எனது அம்மாவின் பெயர் நிருபமா, அவளின் அண்ணா கார்த்திக் ஆவார். இதன்படி கார்த்திக் எனது சித்தப்பா ஆவார் - இக்கூற்று
   1. சரியானது   2. பிழையானது   3. சரியா பிழையா எனக் கூறமுடியாது

28. 100 மெழுகுவர்த்திகள் அணைந்து விடுகின்றன. 5 மணித்தியாலயத்தின் பின் எரிந்து கொண்டிருக்கக் கூடிய மெழுகுவர்த்திகள் எத்தனை?
   1. 50   2. 40   3. 20

29. 
மேசை மீது சதுரமுகிகள் சில உருவில் உள்ளவாறு அடுக்கப்பட்டுள்ளன. இதில் எத்தனை சதுரமுகிகள் உள்ளன?
   1. 12   2. 7   3. 6


30. 
இவ்வுருவில் எத்தனை நேர்க்கோடுகள் உள்ளன?
   1. 6   2. 8   3. 3


31ஆம், 32ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள சொற்களுக்கிடையிலான தொடர்பைப் புரிந்துகொண்டு அடுத்துள்ள சொல்லுக்குப் பொருந்தக்கூடிய சொல்லைத் தெரிவு செய்க


31. இருட்டு - வெளிச்சம் - யுத்தம் - .........................
   1. ஆயுதம்   2. அழிவு   3. சமாதானம்

32. நீர் - குளிர்ச்சி - இரும்பு .............
   1. சூடு   2. கடினம்   3. ஆயுதம்

பின்வரும் குறியீடுகளையும் சொற்களையும் அவதானிக்க

 வியாபாரி அதிக விலைக்கு பொருட்களை விற்றார்


 மாடுகள் புல் மேய்ந்த பின் இளைப்பாறின

 சிறுவர்கள் புத்தகத்தில் பாடம் படித்தார்கள்


மேலுள்ள குறியீடுகளின்படி தரப்பட்டுள்ள வாக்கியத்திற்கு அவசியமில்லாத குறியீட்டின் கீழ் கோடிடுக


33. சிறுவர்கள் அதிக விலைக்கு புத்தகம் விற்றார்கள்





34. புல் மேய்ந்த மாடுகளை வியாபாரி விற்றார்





35. விவசாயி ஒருவர் தொடர்பாக மிகச்சரியான கருத்து எது?
   1. அவர் எப்போதும் ஓர் ஏழையாவார்
   2. அவர் மிகக்கஷ்டப்பட்டு உழைக்கும் ஒருவராவார்
   3. அவர் வயலில் விளைந்த நெல்லை அதிக விலைக்கு விற்பவராவார்

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# பரந்தன் முதல் அறிவியல் நகர் வரை நகராக்கல் பகுதியாக பிரகடனம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில், பரந்தன் முதல் அறிவியல்நகர் வரையான 31 கிராம அலுவலர் பகுதிகளை உள்ளடக்கிய 2 ஆயிரத்து 10 ஹெக்டேயர் பிரதேசம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகராக்கல் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரம் 1950ஆம் ஆண்டுகளில் எழுச்சி பெற்ற நகரமாகவும் மிகவும் பழமை வாய்ந்த நகரமாகவும் காணப்படுகின்றது.

இருந்தும், கிளிநொச்சியில் பேருந்து நிலையம், நூலகம், சிறுவர் பூங்கா, பொழுதுபோக்கு மையங்கள் எவையும் இல்லாத ஒரு நகரமாகவே உள்ளது. இதனால் நகருக்கு தினமும் வருகை தரும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலவேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் மக்கள் மீள்குடியேறியதில் இருந்து இன்று வரை பேருந்து நிலையம் இல்லை.

கிளிநொச்சி ஆயிரத்து 237 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்டமைந்த ஒரு மாவட்டமாகும். இந்த மாவட்டத்தில் 40 ஆயிரத்து 843 குடும்பங்களை சேர்ந்த 1 இலட்சத்து 36 ஆயிரத்து 80 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு வருடத்துக்கு 3533 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி கிடைப்பதுடன், 25 பாகை முதல் 30 பாகை வரையான வெப்ப நிலையும் கொண்டதாக அமைந்துள்ளது.

வடமாகாணத்தின் போக்குவரத்து வீதிகளின் இணைப்பு மையமாகவும், விவசாய உற்பத்தி, கைத்தொழில், கல்வி சார மையமாகவும் கிளிநொச்சி மாவட்டம் காணப்படுகின்றது.

இன்று வரை நவீன வசதிகளைக் கொண்ட நகரமாக கிளிநொச்சி உருவாக்கப்படவில்லை என்ற கருத்து பல்வேறு தரப்பினரிடமும் இருந்து வருகின்றது.

கிளிநொச்சி நகர அபிவிருத்தி தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் கூறுகையில்,

கிளிநொச்சி பரந்தன் முதல் அறிவியல் நகர் வரையான 31 கிராமஅலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய 2,010 ஹெக்டேயர் பிரதேசம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகராக்கல் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட 2,010 ஹெக்டேயர் பிரதேசம் பற்றிய விழிப்புணர்வு கிராம மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படவில்லை.

ஏ - 9 வீதி அதிவேக மார்க்கத்துக்கான பாதையாக அமையும் போது, கிளிநொச்சி மைய நகரத்தில் இரு புதிய பாதைகள் அமையவுள்ளன. இது இலங்கையின் தேசிய திட்டமிடலில் உள்ளது.

முறிகண்டியில் ஆரம்பித்து அம்பாள் குளம், பொன்னகர், மலையாள்புரம் ஊடாக கனகபுரத்தில் இருந்து பரந்தனை இணைக்கின்ற, வெளிச்சுற்று வட்ட வீதி அமையவுள்ளது. இதற்கு புறம்பாக கரடிப்போக்கு சந்தியில் இருந்து ஆரம்பித்து, கணேசபுரம் திருநகர் ஊடாக உதயநகர் பாரதிபுரத்தை, இணைக்கும் வகையில் இரணைமடு சந்தியை சென்றடையும் உள்வட்ட வீதியும் என பிரேரிக்கப்பட்டுள்ளன. இதனால் கிளிநொச்சி நகர மையம், கிழக்கு நோக்கி நகரும்.

நகரின் கைத்தொழில் வலயம், கல்வி வலயம் என்பன அறிவியல் நகர்ப்பகுதியில் தற்போது திட்டமிடப்பட்டுள்ளன. அதன் முதற்கட்டமாக யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம், பொறியியல் பீடம் என்பன அமைந்துள்ளன.

கைத்தொழில் சார்ந்த 4 நிறுவனங்கள் தமது சேவையை ஆரம்பித்து செயற்பட்டு வருகின்றன.

பரந்தன் நகரை மையமாக கொண்டு கைத்தொழில் வலயம் அமையவுள்ளன. இதனைவிட குடியிருப்பு வலயம், விவசாய வலயம் என்பனவும் அமையவுள்ளன.

நகர்ப்புறம் சார்ந்து 51.8 சதவீத நிலங்களில் இயற்கை சூழலியல்சார் தன்மையை பேணுவது உறுதி செய்யப்பட்டு, 1.6 சதவீத பகுதி நீர்ப்பகுதியாகவும் அமையவுள்ளது.

இது பற்றிய விழிப்புணர்வு கிராமப்புறங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது முக்கியமான ஒன்றாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கோவிந்தன் கடைச்சந்தியில் பேருந்துகளின் ஊழியர்கள் கைகலப்பு

(கிளிநொச்சி)

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலை ஊழியர்களுக்கும் தனியார் பஸ் சங்க ஊழியர்களுக்கும் இடையில் கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்தியில் நேற்று முன்தினம் பிற்பகல் கைகலப்பு ஏற்பட்டதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் வட்டக்கச்சி வழித்தட சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை கிளிநொச்சி சாலை பேருந்தை, வட்டக்கச்சியில் இடைமறித்த தனியார் பஸ் சங்கத்தை சேர்ந்தவர்கள், பேருந்துக்குள் ஏறி சாரதி மீதும் நடத்துநர் மீதும் தாக்குதல் நடத்தினர். இதன் போது கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதில், கிளிநொச்சி பேருந்து சாலையை சேர்ந்த ஊழியர் ஒருவரும், தனியார் பஸ் நடத்துநர் ஒருவரும் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தங்கள் ஊழியர்கள் மீது தனியார் பஸ் சங்க ஊழியர்கள் தாக்குதல் மேற்கொண்டதாக கிளிநொச்சி சாலை ஊழியர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் கூறினர்.

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி மோசடி பிரான்ஸிலிருந்து வந்தவர் கைது

(கிளிநொச்சி)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி 12 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பண மோசடி செய்த பிரான்ஸ் பிரஜையை எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி, பரந்தன் பகுதியை சேர்ந்த ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி கடந்த 2012 ஆம் ஆண்டு, சந்தேக நபரும் முகவர் ஒருவரும் இணைந்து மேற்குறித்த பணத்தை வங்கி மூலம் பெற்றுள்ளனர்.

பணம் கொடுத்தவரை வெளிநாட்டுக்கு அனுப்பாமல் ஏமாற்றியதையடுத்து, பாதிக்கப்பட்டவர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் பிரான்ஸில் வசித்து வருவதால், இலங்கை வரும் போது அவரைக் கைது செய்யும்படி குடிவரவு குடி அகல்வு அதிகாரிகளுக்கு பொலிஸார் அறிவித்திருந்தனர்.

கடந்த 18 ஆம் திகதி அதிகாலை 2.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக சந்தேகநபர் இலங்கை வந்திருந்த வேளை, சந்தேகநபரை கைது செய்த குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினார்கள்.

சந்தேகநபருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதை கருத்திலெடுத்த நீர்கொழும்பு நீதவான் சந்தேகநபரை கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

இவரை பொறுப்பேற்ற பொலிஸார், கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினார்கள்.

தனக்கு பிணை வழங்குமாறு மேற்படி நபர், தனது சட்டத்தரணியூடாக நீதிமன்றத்தில் கோரினார்.

மேலும் இருவரைக் கைதுசெய்வதற்காக இந்நபரிடம் விசாரணைகளை நடத்த வேண்டியிருப்பதால் பிணை வழங்கவேண்டாம் என பொலிஸார் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து, சந்தேகநபரை விளக்கமறியலில் வைத்த நீதவான், அவரை வவுனியா சிறைச்சாலையில் வைத்து விசாரணை செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## தலைமைத்துவ பயிற்சியில் கொடுமை உடனடி விசாரணைக்கு கோரிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தலைமைத்துவ பயிற்சியின் போது மாணவர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள் குறித்து உடனடியாக விசாரணை செய்யுமாறு அனைத்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம்வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுவ பயிற்சி முகாம்களில் கொடுக்கப்பட்ட பயிற்சியின் போது மாணவர்கள் பாலியல் துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதன் நடத்துநர் நஜித் இந்திக்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தலைமைத்துவ பயிற்சிகளை நி[illegible]ந்துவதாக உயர் கல்வி [illegible]ங்க அமைச்சர் ரஜீவ விஜே[illegible] தெரிவித்துள்ளார். உயர் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

மேலும் தலைமைத்துவ பயிற்சியின் போது மாணவர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள் குறித்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நடத்தினர் தெளிவுபடுத்தியுள்ளனர்.

## அதிக விலையா? உடன் அறிவிக்கவும்

எரிபொருள் விலை குறைப்பின் பின்னர், கூடிய விலையில் எரிபொருள் விற்பனை செய்யும் சம்பவங்கள் ஏதும் இடம்பெற்றால், அது தொடர்பில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் நிறுவப்பட்டுள்ள விசேட முறைப்பாட்டு பிரிவுக்கு அறிவிக்குமாறு பொதுமக்களிடம் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

அவசர தொலைபேசி இலக்கம் - 0115 243 243 அல்லது தொலைபேசி இலக்கங்கள் - 0115 455 130, 0115 455 251, 0115455254 அல்லது தொலைநகல் - 01156 455 431, 0115 455 411 மூலமாக அறிவிக்க முடியும் என்று மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் வெள்ளத்தால் 76 ஆயிரம் ஹெக்டேயர் பாதிப்பு


கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக 76 ஆயிரம் ஹெக்டெயர விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

மாகாணத்தில் சுமார் நன்காயிரத்து எழுநூறு ஹெக்டெயரில் பயிரிடப்பட்ட உப உணவு பயிர்ச்செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 35,851 ஹெக்டெயர், அம்பாறை மாவட்டத்தில் 17,125 ஹெக்டெயர், திருகோணமலை மாவட்டத்தில் 23,085 ஹெக்டெயர் விவசாயச் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,730 ஹெக்டெயர், அம்பாறை மாவட்டத்தில் 1,718 ஹெக்டெயர், திருகோணமலை மாவட்டத்தில் 1,319 ஹெக்டெயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த உப உணவுச் செய்கையும் பாதிப்படைந்துள்ளன.

# மோசமான கடவுச்சொல் 123456 ஆய்வின் மூலம் கண்டுபிடிப்பு




(கலிபோர்னியா)

கடவுச்சொல் வைப்பது ஒரு கலை என்று மறைமுகமாக சொல்கிறது கலிபோர்னியாவின் லாஸ் கேட்டோஸ் மையமாக கொண்ட கடவுச்சொல் மேலாண்மை நிறுவனம். கடந்த ஆண்டு இணைய வழியாக திருடப்பட்டு, கசிந்த மில்லியன் கணக்கான கடவுச்சொற்களை ஆய்வு செய்த அந்நிறுவனம் மோசமான கடவுச்சொற்களின் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் 123456 என்ற கடவுச்சொல்அதிக முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கடுத்தபடியாக 12345 மற்றும் 12345678 போன்றவை பாஸ்வேர்டுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

இ-மெயில், ஏ.டி.எம், உட்பட பல சேவைகளுக்காக கடவுச்சொல் பயன்படுத்துவதால் பலரும் எளிதில் நினைவிருக்கும் பெயர்களையே வைக்கிறார்கள். இது மற்றவர்கள் எளிதாக அதை ஹேக் செய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்து விடுகிறது. இதற்கு என்ன செய்யலாம் என்று யோசிப்பவர்களுக்கு பட்டியல் வெளியிட்ட நிறுவனம் சில ஆலோசனைகளையும் கூறியுள்ளது.

உங்களுக்கு பிடித்த விளையாட்டு, பிறந்த திகதி பிடித்த பிரபலங்களின் பெயர்கள், தட்டச்சு செய்வதற்கு எளிமையான சொற்களை கடவுச்சொல்லாக உபயோகிக்க வேண்டாம். அதே நேரம் எண் மற்றும் எழுத்தால் இணைந்த கடவுச்சொல்லை உபயோகப்படுத்தலாம் என்று அந்நிறுவனம் கூறியுள்ளது.

# தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு சக்தி வாய்ந்த செயற்றிட்டம்

## ஒபாமா அறிவிப்பு



(வொஷிங்டன்)

சர்வதேச அளவில் தீவிரவாதத்தை அடியோடு ஒழிப்பதற்காக, சக்தி வாய்ந்த புதிய செயறறிட்டத்துக்கு ஒப்புதல் வழங்குமாறு, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களை அதிபர் பராக் ஒபாமா கேட்டுக் கொண்டுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் அதிபர் ஒபாமா கடந்த செவ்வாய்க்கிழமை பேசியதாவது, பாகிஸ்தான் பள்ளி தாக்குதலில் இருந்து பாரிஸ் பத்திரிகை அலுவலக தாக்குதல் வரையிலும், யாரெல்லாம் தீவிரவாதிகளால் குறி வைக்கப்பட்டுள்ளார்களோ, அவர்களுக்கு ஆதரவாக, அவர்களோடு சேர்ந்து நாம் செயற்பட்டு வருகிறோம்.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளை முற்றிலும் ஒடுக்குவதற்கு சக்திமிக்க செயற்றிட்டம் உள்ளது. அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புதல் அளிக்க வேணடும். நம்முடைய இணையத்தளங்களை எந்தவொரு வெளிநாடும் முடக்க முடியாது. நம்முடைய ரகசியங்களை எவரும் திருட முடியாது. நாம் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளா விட்டால் நம்முடைய பொருளாதாரம் சீர்குலையும். சர்வதேச அளவில் ஏராளமான வாய்ப்புகளை வழங்கக்கூடிய நமது தொழில்நுட்ப யுக்திகளை நாம் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு ஒபாமா பேசினார்.




# நெப்போலியனுக்கு ஆதரவு

ஸ்ரீரங்கம் தொகுதியில் நடிகர் நெப்போலியன் போட்டியிடும் பட்சத்தில், தே.மு.தி.க., ஆதரவளிக்கும். அவர் போட்டியிடாவிட்டால், தே.மு.தி.க., நிறுத்தும் வேட்பாளருக்கு பா.ஜ., ஆதரவளிக்க வேண்டும்" என, விஜயகாந்த், பா.ஜ., தலைவர் தமிழிசை சவுந்தரராஜனிடம் கூறியுள்ளார்.



அ.தி.மு.க., பொதுச்செயலாளர் ஜெயலலிதா எம்.எல்.ஏ. பதவி பறிகப்பட்டதால், காலியாகவுள்ள, ஸ்ரீரங்கம் சட்டசபை தொகுதியில், பெப்ரவரி 13ஆம் திகதி இடைத்தேர்தல் நடக்கவிருக்கிறது. இத்தேர்தலில், போட்டியிட முடிவு செய்து அ.தி. மு.க.,வும், தி.மு.க.வும் வேட்பாளர் களை அறிவித்துள்ளன.

இத்தேர்தலில், பா.ஜ., போட்டியிட வேண்டும் என, அக்கட்சி நிர்வாகிகள் விரும்புகின்றனர். இது குறித்து, கட்சியின் தேசிய செயலர் அமித்ஷாவிடம் தெரிவித்த போது, அவரும் அதற்கு ஒப்புதல் அளித்ததாக தெரிகிறது. இதனால், கூட்டணி கட்சிகளின் ஆதரவை பெறுவதற்கான முயற்சியை தமிழக பா.ஜ., நிர்வாகிகள் மேற்கொண்டனர்.

# அமெரிக்கா-கியூபா இடையே தொடங்கியது பேச்சுவார்த்தை

அமெரிக்கா, கியூபா நாடுகளுக்கு இடையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு நாள் பேச்சுவார்த்தை கியூபா தலைநகர் ஹவானாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை தொடங்கியது.

அமெரிக்காவுக்கும், கியூபாவுக்கும் இடையே, கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வரும் பனிப்போரை முடிவுக்கு கொண்டு வர, அமெரிக்க அதிபர் ஒபாமாவும், கியூபா அதிபர் ரவுல் காஸ்ட்ரோவும், கடந்த மாதம் முடிவெடுத்தனர்.

அதையடுத்து, கியூபா தலைநகர் ஹவானாவில் அமெரிக்கா, கியூபா நாடுகளுக்கு இடையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தை புதன்கிழமை தொடங்கியது. முதல் நாள் பேச்சுவார்த்தையில், அமெரிக்காவின் வெளியுறவுத் துறை உதவி அமைச்சர் அலெக்ஸ் லீயும், கியூபாவின் வெளியுறவு அமைச்சக மூத்த அதிகாரி ஜோசி.ஃ.பினா விடாலும் பங்கேற்று, புலம் பெயரவோர் பிரச்சினைகள் குறித்து பேசியதாக தெரிகிறது. வியாழக்கிழமை நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில், இருநாடுகளுக்கு மிடையேயான தூதரக உறவுகளை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

# பீகாரில் மதக்கலவரம்

பீகாரில் நடந்த மதக்கலவரத்தில் சிக்கிக்கொண்ட 10 முஸ்லிம்களை விதவைப் பெண் ஒருவர் காப்பாற்றியுள்ளார்.

பீகாரின் அசிப்பூர் என்ற கிராமத்தில் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கின்றனர். இக்கிராமத்தில் கடந்த 18ஆம் திகதி நுழைந்த கும்பல் ஒன்று மக்கள் மீது தாக்குதல் நடத்தியது, இந்தத்தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டனர், 25இற்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து நாசமாயின. கலவரத்தில் சிக்கிக் கொண்ட 10 முஸ்லிம்களை, 50 வயதான சயீல் தேவி என்ற பெண் தனது இரண்டு மகள்களின் உதவியுடன் காப்பாற்றியுள்ளார்.

இந்நிலையில் இவரது நல்ல எண்ணத்தையும், தைரியத்தையும் பாராட்டி பீகார் முதல்வர் ஜித்தன் ராம் மஞ்ஜி 51,000 ரூபா பரிசுத் தொகையை வழங்கியுள்ளார்.

# தீவிரவாதத்திற்கு எதிராக புதிய நடவடிக்கைகள்

## பிரான்ஸ் அறிவிப்பு



பிரான்ஸில், உள்நாட்டிலேயே உருவான இஸ்லாமியத் தீவிரவாதத்தை எதிர்கொள்ள புதிய , பரந்துபட்ட அதிகாரங்கள் கொண்ட பயங்கரவாதத்துக்கு எதிர் நடவடிக்கைகளை, பிரெஞ்சு அரசு அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையில், 2,500 இற்கும் மேற்பட்ட உளவு முகவர்கள் ஆட்சேர்க்கப்படுவார்கள் என்று பிரதமர் மானுவெல் வேல்ஸ் கூறினார்.

பாதுகாப்புப் படைகளுக்கு மேலும் நல்லமுறையில் ஆயுதங்கள் வழங்கப்படும் என்றும், இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்ட சந்தேக நபர்கள் குறித்த மேலும் விவரமான தரவுகள் கொண்ட தகவல் தளம் ஒன்று உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.


# ஓநாய் தாக்குதல் நடாத்தப்படும் மிரட்டல் விடுக்கும் அல்கொய்தா

மேற்கத்திய நாடுகளைக்குறி வைத்து ஓநாய் தாக்குதல் (உல்.ஃ.ப் அட்டாக்- திடீர் தாக்குதல்) நடாத்த அல்கொய்தாவின் ஏமன் பிரிவு அழைப்பு விடுத்துள்ளதாக சைட் புலனாய்வு குழு தெரிவித்துள்ளது.

பாரீஸ் நகரில் சார்லி ஹெப்டோ பத்திரிகை அலுவலகத்திலும், கொஷர் சூப்பர் மார்க்கெட்டிலும் சமீபத்தில் தீவிரவாதிகள் அடுத்தடுத்து தாக்குதல் நடாத்தினர்.

இந்த தாக்குதல்களுக்கு பொறுப்பேற்ற அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் ஏமன் நாட்டுப் பிரிவினர், இது தொடர்பாக வெளியிட்டுள்ள வீடியோவில், இன்னும் பல தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாகவும், சர்வதே விமானங்களை தகர்ப்பது அல்லது வொஷிங்டனை அதிர வைத்தமை போன்ற ஓநாய் தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

# பாறை உப்பில் அழகிய உணவகம்




ஈரான் நாட்டில் ஷிராஸ் என்னும் பகுதியில் சால்ட் ரெஸ்டாரண்ட் என்னும் உணவகம் ஒன்று இருக்கிறது.

உணவகத்தின் சுவர், பார், மேசை, நாற்காலி என்று எல்லாமே முழுக்க முழுக்க பாறை உப்பால் மட்டுமே உருவாக்கப்பட்டிருக்கின்றன. என்பதே இந்த உணவகத்தின் சிறப்பம்சம் ஆகும்.இந்த உணவகத்தை வடிவமைத்த எமிட்டாஸ் டிசைனிங் க்ரூப் என்ற குழுவினர் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் கட்டடங்களைக் கட்டுவதில் நிபுணர்கள்.அவர்கள் அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு கட்டடங்களைக் கட்டி வருகிறார்கள்.

அந்த உணவகத்தின் அருகில் உப்புச் சுரங்கம் இருப்பதால் உப்பிலேயே அந்த கட்டடத்தைக் கட்டியுள்ளனர்.பாறை உப்பிலிருந்து செய்யக்கூடிய இந்தப் பொருள்களை மீண்டும் மீண்டும் மறு உபயோகம் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# தற்காலிக ஊழியர்களை இடைநிறுத்த யாழ். மாநகரசபை முயற்சிக்கிறதா?

## 150 வறிய குடும்பங்கள் பாதிக்கப்படும் அபாயம்



யாழ்.மாநகரசபையில் தற்காலிக நியமனம் வளங்கப்பட்டு, ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்துவந்த ஊழியர்களை தற்போதைய ஆட்சி மாற்றத்தின் காரணமாக மாநகரசபை நிர்வாகம் நிறுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டுவருவதாக பாதிக்கப்பட்ட ஊழியர்கள் யாழ்.மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்றுக் காலை யாழ். மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமைக்காரியாலயத்திற்கு சென்ற மாநகரசபை ஊழியர்கள் ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகனுடனான சந்திப்பின்போதே மேற்கண்டவாறு முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ்.மாநகரசபையின் பல தரப்பட்ட வேலைகளுக்கு ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியினரால் தற்காலிக அடிப்படையில் கடந்த ஆண்டு நியமனங்கள் வளங்கப்பட்டிருந்தன. இந்த நியமனங்களை பெற்றவர்கள் நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக மாநரசபையில் தொழில்புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இருந்தும் சுயநல அரசியல் நோக்கத்திற்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரால் வழங்கப்பட்ட நியமனங்கள் எனக்கூறி இந்த தொழிலாளர்களை தற்போதைய அரசியல் நிலைமைகளை சாதகமாகக் பயன்படுத்தி வரும் அரசியல்வதிகளே ஊழியர்களை தொழிலிருந்து நிறுத்திவிட முயற்சிப்பதாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒருங்கிணைப்பாளரிடம் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய அரசியல் மாற்றத்தின் காரணமாக பழிவாங்கல்களும் சமூக சீரழிவுகளும் குடாநாட்டில் தலைவிதித்தாடுவதை காணமுடிகின்றது. குடாநாட்டின் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டவர்களும் தமது சுயநலன்களுக்காக நியமனம் பெற்றவர்களை பழிவாங்கக்கூடும் எனவும் மாநகரசபை வட்டாரங்களிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன..

பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி ஊழியர்களுடன் கலந்துரையாடியபின் கருத்துத்தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) -

தமிழர் உரிமையென கோசமிட்டுத்திரியும் கூட்டமைப்பினர் இதுவரை தமிழருக்கு செய்தது தான் என்ன? என்று உங்களிடம் நீங்களே கேள்விகளை கேட்டுப் பாருங்கள். பதில் பூச்சியமாகவே இருக்கும். ஆனால் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை யார் விமர்சித்தாலும் நாம் அவற்றையெல்லாம் கண்டுகொள்ளாது மக்களின் சேவையை முதன்மைப்படுத்தியதனால் தான் குடாநாட்டு மக்களுக்கு முற்று முழுதான சேவையை எம்மால் செய்துகொடுக்க முடிந்தது.

நடைபெற்றுவரும் நூறு நாள் அபிவிருத்தித்திட்டத்திற்குள் உங்களது பிரச்சினைகளையும் முதன்மைப்படுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் செயலாளர்நாயகம் டக்ளஸ்தேவானந்தாவூடாக பேசி தீர்வுகண்டு தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றோம்.

மேலும் இந்த பணிநீக்கம் சட்டரீதியாக மேற்கொள்ளப்படுகின்றதோ அல்லது அரசியல் பழிவாங்கல்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றதோ என்பதையும் அறியவேண்டிய அவசியம் எமக்கு உண்டு எனத் தெரிவித்துள்ளார்.

இப்பணி நீக்கத்தினால் 150 இற்கு மேற்பட்ட வறிய தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

### ரெலிக்கொம்...

அவரது சகோதரருக்கு ஸ்ரீலங்கா டெலிக்கொம் தலைவர் பதவி வழங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

2006ஆம் ஆண்டிலிருந்து கடந்த வருடம் டிசெம்பர் வரை, அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பொது முகாமையாளராகவும் குமாரசிங்க சிறிசேன கடமையாற்றியிருந்தார். அரசாங்கத்திலிருந்து வெளியேறி பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன களமிறங்கியதன் பின்னர் குமாரசிங்க சிறிசேனவின் பதவி பறிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### அமைச்சர்...

சுன்னாகம் மின்சார நிலையத்தால் உரிய முகாமைத்துவமின்றி வெளியேற்றப்படும் கழிவு ஓயிலால் ஏற்படும் பாதிப்புக்கள், கோரிக்கைகள் அடங்கிய முழுமையான மகஜரும் கையளிக்கப்பட்டதுடன் கழிவு ஓயில் பாதிப்புக்கெதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் உண்ணாவிரதப் போராட்டம் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது.

கழிவு ஓயில் வெளியேற்றப்படுவதால் யாழ்.குடாநாட்டின் நான்கு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த மக்களின் கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் எஞ்சியுள்ள யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களும் பாதிக்கப்படக் கூடிய அபாய நிலை தொடர்பிலும் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த நிலையில் குறித்த மின் நிலையத்தை உடனடியாக மூடுமாறு அமைச்சர் எம் முன்னாலேயே தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் எனவும் கூறினார்.

இந்தச் சந்திப்பில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமையத்தைச் சேர்ந்த தி.சுபாஷ்,மருத்துவர் ப.நந்தகுமார்,பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.இராஜ மேனகன்,ஆசிரிய ஆலோசகர் தா.நிகேதன்,சேதன விவசாயி க.வேலாயுதம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை, நொதேன்பவர் நிறுவனத்தை மூடுமாறு மின் சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க உத்தரவிட்டிருந்த நிலையில் நிறுவனத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு மேற்படி நிறுவனமும் நேற்று இழுத்து மூடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தடன் நேரடியாகவே தொடர்பை ஏற்படுத்தி அங்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாடி நிறுவனம் மூடப்பட்டுள்ளதாக மக்கள் சக்தி அமைப்பின் தலைவர் மு.குமாரவேல் ஊடகங்களுக்கு நேற்று மாலை தெரிவித்துள்ளார்.

### பிரதம..

தொடர்ந்தும் பதவியில் நீடிக்கிறார் என்றும் கொடிப்பிலி தெரிவித்தார்.

எனவே சம்பந்தப்பட்ட செய்தி தொடர்பாக உரிய திருத்தங்களை செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்கும்படி பிரதம நீதியரசரின் ஊடகப் பேச்சாளர் ஊடகங்களிடம் கூறினார்.

### இராணுவ...

இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரிக்கப்பட்டதாக பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

முன்னைய அரசாங்கத்தில் 7 வருடங்கள் பணியாற்றியவன் என்ற அடிப்படையில் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆதரவு வெளியிடும் வகையில் முன்னாள் ஜனாதிபதி அழைத்தமைக்கு இணங்க அலரிமாளிகைக்கு சென்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

தாம், அதிகாலை 3 மணிக்கு அலரி மாளிகைக்கு சென்றபோது மஹிந்த ராஜபக்ச தமக்கு பின்னர் ஜனாதிபதியாக வருபவரிடம் அதிகாரத்தை கையளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததாக பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்தே ரணில் விக்கிரமசிங்க அழைக்கப்பட்டு அவருடன் முன்னாள் ஜனாதிபதி கலந்துரையாடியதாக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனவே 9ஆம் திகதி அதிகாலை வேளையில் எவ்வித குற்றச்செயல்களுக்கும் திட்டமிடப்படவில்லை என்று தாம் விசாரணை அதிகாரிகளிடம் தெரிவித்ததாக பீரிஸ், தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# குடிநீர் பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வு

காவேரி கலா மன்றத்தின் வழிகாட்டலில் ஆனைவிழுந்தான் கிராமத்தில் பெண்கள் தலைமைத்துவம் வகிக்கும் குடும்பங்களை சேர்ந்த பெண்கள் குழுக்களாக இணைந்து கிணறு வெட்டும் முயற்சியல் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் இக் கிராமத்தில் கோடைக்கால குடிநீர் பிரச்சினை கணிசமாக தீருமென எதிர்பார்க்கப்படுகிறது.(90)

### கடந்த...

ரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

இந்தக் குழுவில் ரணில் விக்ரமசிங்க (தலைவர்), மங்கள சமரவீர, பாட்டாளி சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம், அநுரகுமார திஸாநாயக்க, ஆர்.சம்பந்தன், சரத் பொன்சேகா, எம்.ஏ.சுமந்திரன், கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, சட்டத்தரணி வெலியமுன, மலிக் சமரவிக்ரம உள்ளிட்டவர்கள் அடங்குகின்றனர்.

இந்தக் குழுவில் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இணைப்பாளராக செயற்படுவார் என ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

### கிழக்கில்...

மைப்பின் தலைவர்களான இரா.சம்பந்தன் எம்.சுமந்திரன் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் சந்தித்தனர்.

இச்சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் பி.பகல் 3.00 மணியளவில் நடைபெற்றதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்குமாகாணசபையின் முதலமைச்சராக தமிழர் ஒருவர் வருவதற்கான நியாயமான காரணங்களை கூட்டமைப்பினர் முன்வைத்து கருத்துக்களைத் தெரிவித்தனர்.

முதலமைச்சர் பதவியினை தமக்கு விட்டுத்தருமாறும புதிய ஆட்சி அமைவதிலுள்ள சிக்கல் நிலைமையினை தீர்த்துவைக்குமாறும் ஜனாதிபதியிடம் இதன்போது கூட்டமைப்பு பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

ஜனாதிபதி இவர்களது கருத்துக்களை நிதானமாகச்செவிமடுத்த பின் தான் பொதுவாக மாகாணசபை விடயங்களில் தலையிடுவதில்லையென எண்ணியிருக்கிறேன். ஆனால் தங்களது நியாயமான கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றேன். என்றார்.

இது விடயத்தில் தாங்கள் தலையிட்டு கிழக்கில் ஜனநாயகமும் நீதியும் நிலைக்க வகைசெய்யவேண்டுமென கூட்டமைப்பினர் ஜனாதிபதியைக்கேட்டுக்கொண்டனர்.

எனினும் எந்த தீர்க்கமான முடிவுமில்லாமல் நியாயபூர்வமான கருத்துப்பரிமாறல்களுடன் இச்சந்திப்பு நிறைவுபெற்றுள்ளது. மொத்தத்தில் கிழக்கு விவகாரம் முடிவில்லாமல் தொடர்கிறது.

### தன்மீதான..

யாளர் மாநாட்டில் அறிவிக்கப்பட்ட முடிவுக்கு மாறாக மைத்திரிபால சிறிசேனவுக்கு வெளிப்படையாக என்னால் ஆதரவு தெரிவிக்க முடியாது எனத் தெரிவித்திருந்தேன்.

காலாண்டு காலமாக தமிழ் அரசியலினால் கட்டிக் காக்கப்பட்ட அடிப்படை அரசியல் அறங்களைப் பாதுகாக்கும் பொருட்டும் எனது மனச்சாட்சிக்கு நேர்மையாக இருக்கும் பொருட்டும் இந் நிலைப்பாட்டை நான் எடுத்தேன்.

தமிழரசுக்கட்சிக்குள் உட்கட்சி ஜனநாயகம் முழுமையாக செத்துவிடவில்லை என்ற நம்பிக்கையிலேயே அக் கருத்தை வெளியிட்டேன். நான் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டதாக தங்கள் கடிதம் எனது நம்பிக்கை தவறானது என்பதை நிரூபித்துள்ளது.

உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு என் மீதான குற்றச்சாட்டுப் பத்திரத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றேன். அக் குற்றச்சாட்டு பத்திரத்தோடு பின்வரும் இரண்டு வகை ஆவணங்களையும் சேர்த்து அனுப்புமாறும் வேண்டுகின்றேன்.

அவையாவன, தமிழரசுக்கட்சியின் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான ஜனநாயக ரீதியாக முடிவடுக்கப்பட்டதை ஆவணப்படுத்தும் கூட்டத்தின் கூட்ட அறிக்கை, இது தொடர்பாக கலந்துரையாடப்பட்ட கட்சிக் கூட்டங்கள் அனைத்தினதும் கூட்ட அறிக்கை, அவற்றில் சமுகமளித்தவர்களின் பெயர் விபரம் உள்ளடங்கலாக..

மற்றும் தமிழரசுக் கட்சியின் யாப்பின் பிரதியொன்று..

என அக் கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடக்கு...

தமிழ் மக்களை தவறாக வழிநடத்தும் கூட்டமைப்பினரோ, 13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழீழத் தீர்வுக்கு எதிரானது என்றும், பயனற்றது என்றும் கூறியதோடு, 13ஆவது திருத்தச் சட்டத்தை தாம் தொட்டுப்பார்க்கவே மாட்டோம் என்றும் கூறிவந்தனர்.

ஆனால் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் ஆரம்பித்து கட்டம் கட்டமாக முன்னேறி தமிழ் மக்களின் அரசியல் இலக்கை அடைந்து கொள்ள முடியும் என்று கூறிவந்துள்ளோம்.

அது 1987ஆம் ஆண்டிலேயே வடக்கு கிழக்கில் நடைமுறைக்கு வந்திருந்தால் தமிழ் மக்கள் இத்தனை அழிவுகளுக்கும், இழப்புக்களுக்கும் முகம் கொடுத்திருக்க மாட்டார்கள். வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டிருக்காது, தமிழ் மக்கள் பலவீனமான அரசியல் சூழலை எதிர்கொண்டிருக்கும் தற்போதைய நிலைமை ஏற்பட்டிருக்காது. துரதிஸ்டவசமாக எல்லாமும் நடந்து முடிந்துவிட்டது.

ஆனால் தற்போது புதிய பிர்மதர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் கடந்த இருபதாம் திகதி தனது நாடாளுமன்ற உரையில், மாகாணங்களுக்கு அதிகார பகிர்வு அளிக்க வகை செய்யும் 13ஆவது அரசியல் சட்ட திருத்தத்தை அமுல்படுத்துவோம். ஒன்றுபட்ட இலங்கை என்ற அடிப்படையிலும், சிறுபான்மை தமிழர்களுடன் நல்லிணக்கத்தை எட்டுவதற்காகவும் இந்த சட்ட திருத்தத்தை அமல்படுத்தப்போகிறோம். என்றும் கூறியிருப்பது எமது உறுதிமிக்க நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஆகவே பிரதமரின் இந்த நிலைப்பாட்டை நாம் வரவேற்கின்றோம். எமது மக்களின் அபிலாசைகளுக்கு வாய்ப்பான முயற்சிகளை ஈ.பி.டி.பி உறுதியோடு ஆதரிக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று இரவு அலரிமாளிகையில் நடந்தது என்ன?

## விபரிக்கிறார் உதயகம்மன்பில



(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நாளன்று இரவு அலரி மாளிகை யில் பிரதம நீதியரசர் இருந்தாரா என்பது குறித்து தனக்கு நினை வில்லை என்று கூறியுள்ள முன் னாள் மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில, ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனம் செய்வது குறித்து அங்கு கலந்துரையாடப் பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிந்த பின்னர், இரா ணுவத்தின் உதவியுடன் ஆட்சி யைத் தக்கவைத்துக் கொள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முயற்சித்ததாக சுமத் தப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர் பாக, அப்போது அலரி மாளிகை யில் இருந்த உதய கம்மன்பில விடம் நேற்று முன்தினம் குற் றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணை நடத்தி னர்.

விசாரணை முடிந்து வெளியே வந்த அவர், செய்தியாளர்களிடம் கூறுகையில்,

அவசரகாலச்சட்டத்தைப் பிரக டனப்படுத்தும் முயற்சிகள் ஏதும் மேற் கொள்ளப்படவில்லை. ஆனால், ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனம் செய்ய வேண்டும் என்பது குறித்துக் கலந்துரையா டப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் அரசியல் வாதிகள் பலரின் பாதுகாப்புக் குறித்த கவ லைகள் இதன்போது எழுந்திருந் தன.

வாக்கு எண்ணும் நிலையத் தில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் மாகாணசபை உறுப்பினர் சமன் மல்லி சகலசூரியவைத் தாக்க முயன்றிருந்தனர்.

கொழும்பில் பல இடங்களில் வன்முறைகளுக்கு வாய்ப்பிருந் ததுடன், ஆளும்கட்சியினர் தாக் கப்படும் கவலையும் இருந்தது.

அதுதவிர, புதிய ஜனாதிபதி பதவியேற்பதற்குத் தேவையான உதவிகளை வழங்குவது குறி த்தே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவுகளை வழங்கினார்.

அவரது ஒரு கவலை தனது சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷ வின் பாதுகாப்பு பற்றியதாகவே இருந்தது.

இப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் அது பற்றிப் பேசினார். அதுதான் தேர் தல் நாளன்று இரவு நடந்தது. என்று குறிப்பிட்டார்.

அன்று அலரிமாளிகையில் பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் நின்றிருந்தாரா என்று ஊடகவிய லாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போது, அங்கு அன்றிரவு நிறை யப் பேர் நின்றதாகவும், அவர்க ளில் பிரதம நீதியரசர் மொகான் பீரிசைக் கண்டதாக தனக்கு நினைவில்லை என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

# சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம்

## சுகாதார அமைச்சருடன் விசேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் சுகா தாரத் தொண்டர்களின் நிரந்தர நியமனம் குறித்து மத்திய சுகா தார அமைச்சருடனான சந்திப் பொன்று எதிர்வரும் திங்கட் கிழமை இடம்பெறவுள்ளதாக ஸ்ரீலங்கா ஜனரக சவுக்கிய சேவா ஹமியர் சங்கத்தின் யாழ் போதனா வைத்தியசாலையின் செயலாளர் ஆர். ஜெயருபன் தெரிவித்தார்.

தற்போது 127 சுகாதாரத் தொண்டர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரி கின்றனர்.

இவர்களுக்கான நிரந்தர நிய மனம் குறித்து எமது தாய்ச்சங் கத்தினூடாக மத்திய சுகாதார அமைச்சுக்கு கடிதம் அனுப்பியி ருந்தோம். அதன் அடிப்படையில் எம்மை கலந்துரையாடலுக்காக எதிர்வரும் 26 ஆம் திகதியன்று அழைக்கப்பட்டுள்ளது.

எமது சங்க உறுப்பினர்கள் 25 பேர் வரையில் இக்கலந்து ரையாடலுக்காக பத்திரமுல்லை யிலுள்ள சுகாதார அமைச்சுக்கு சென்று எமது தாய்ச்சங்க பிரதி நிதிகளுடன் இணைந்து எமது தொண்டர்களுக்கான நிரந்தர நியமனம் குறித்து கலந்துரையா டவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

# வீதி விபத்தில் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதி தபால்பெட்டிச் சந்தி யில் நேற்று இடம்பெற்ற விபத் தில் வயோதிப குடும்பஸ்தர் ஒரு வர் ஸ்தலத்தில் உயிரிழந்துள் ளார். நேற்றுக் காலை 9.45 மணி யளவில் துவிச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் நெடுங்குளம், கொழும் புத்துறையைச் சேர்ந்த ஒரு பிள் ளையின் தந்தையான முத்தையா ஆறுமுகம் (வயது - 61) என்ற வயோதிப குடும்பஸ்தரே தலை யில் படுகாயமடைந்து ஸ்தலத் திலேயே உயிரிழந்துள்ளார்.

கூலிவேலை செய்யும் இவர் உணவு வாங்குவதற்காக தபால் பெட்டி சந்தியிலுள்ள உணவகத் திற்குச் சென்ற வேளையிலேயே இவ் விபத் து இடம்பெற்றுள் ளது. (இ,51,25)

# நிலத்தடி நீர் மாசு; பாடசாலைகளுக்கு குடிநீர்

## விநியோகிக்க ஏற்பாடு

சுன்னாகத்திலுள்ள மின் நிலைய கழிவு ஒயில் வெளி யேற்றம் காரணமாக குடிநீர் பிரச் சினை ஏற்பட்டுள்ள வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகள் நீர் பரிசோதனை அறிக்கையி னைத் தரும் பட்சத்தில் குடிநீர் விநியோக ஏற்பாடு செய்து தரப்படும் என வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப் பாளர் பொ.ரவிசங்கர் அறிவித் துள்ளார்.

பிரதேச சபைகளின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கான குடிநீர் விநியோகம் ஏற்பாடு செய்து தரப்படும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் இந்த மாதம் வலிகாமம் கல்வி வலயப் பாட சாலை அதிபர்களுக்கும், வல யப் பணிப்பாளர்களுக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போதே எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# கொள்கைகளுக்கு எதிராக செயற்பட்டால் நடவடிக்கை

## சுதந்திரக் கட்சி அறிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பு மற்றும் கொள்கைகளுக்கு முரணாக செயற்படுகின்ற உறுப் பினர்களுக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்கப்படுமென கட்சி யின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சுசில் பிரேமஜயந்த விடுத் துள்ள அறிக்கையிலேயே இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்க ளின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்காக இந்த அறி க்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை உள்ளிட்ட பல உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் சக்தியக் கட்சியின் மூலம் எதிர்த்தரப்பி னருக்கு ஒத்துழைப்பை வெளிப் படுத்த தயாராகி வருவதாக தக வல்கள் கிடைத்துள்ளன.

எனினும் இதன் மூலம் ஏற் படும் ஆட்சி மாற்றம் நற்காரிக மானது எனவும், இதனால் மாகாண சபையினதோ, ஏனைய உள்ளூராட்சி மன்றங்களினதோ நிலையற்ற தன்மையை சீர் செய்ய முடியாது என்றும் அந்த அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

# 100 நாள் திட்டத்தை கண்காணிக்க குழு

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத்திட்ட செயற்பாட்டை கண்காணிப்பதற்கு விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சிரேஷ்ட ஆலோசகர் ஒருவரின் தலைமையில் இக்குழு இயங்கவுள்ளது. இக்குழுவில் அமைச்சுக்க ளின் செயலாளர்கள் இவர் உட்பட புத்திஜீவிகள் இருவரும் நியமிக் கப்பட்டுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது

# வீதி புனரமைப்பில் முறைகேடு; தடுத்து நிறுத்துவது யார்

நல்லூர் பிரதேசத்தில் குறித்த ஒரு வீதி நிர்மாணத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு வேறொரு வீதியை புனரமைத்த சம்பவமொன்று நல்லூர் கொக்குவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து பொற்பதி சனசமூக நிலையத்தின் தலைவர் இராசையா பார்த் தீபன் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணை யாளருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

நல்லூர் பிரதேச சபையால் அதன் எல்லைக்குட்பட்ட கொக்குவில் பொற்பதி வீதியின் 2 ஆம் ஒழுங்கையை புனரமைக் கவென இந்த நிதி கடந்த வருடம் ஒதுக் கப்பட்டிருந்தது.

இருப்பினும் குறித்த நிதி அந்த வீதி யில் அமைந்துள்ள 4 ஆம் ஒழுங்கையை புனரமைக்கவே இந்த நிதி தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அத்துடன் இவ்வீதிக்கான புனர மைப்பை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக வீதித் திருத்தத்துக்காக எடுத்து வரப்பட்ட கற் களை தனது காணியினுள் இறக்கியிருப்ப தாகவும் இது பற்றி பிரதேச சபை செய லாளரிடம் பல தடவைகள் முறையிட்ட போதும் இதுவரை உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்க வில்லையென்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முறைகேடான நடவடிக்கை பிர தேச சபை தவிசாளரின் நேரடி வழிகாட் டலில் இடம்பெறுவதாகவும் அதனை உடன் தடுத்து நிறுத்துமாறும் ஆணையா ளருக்கு எழுதிய அந்தக் கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதற்கெதிராக உரிய நடவடிக்கை களை எடுக்கவிருப்பதாக ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரு மான அம்பலம் ரவீந்திரதாசன் தெரிவித் துள்ளார்.

வடமாகாண முதலமைச்சர், பிரதம செயலர், யாழ். அரச அதிபர், நல்லூர் பிரதேச செயலர், மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோருக்கும் இக்கடிதத் தின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (24)


NALIN Information Technologies (Pvt) Ltd.

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

யாழ் வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு

NAIN INFORMATION TECHONOLOGY நளின் மாபெரும் மலிவு விற்பனை.

5ஆம் தலைமுறை கணனிகள், மடிக் கணனிகளை முதல் முதலாக அறிமுகம்செய்த நாம் மேலும் விலைக்கழிவுடன் வழங்குகின்றோம்.

சலுகைகள் 23.24.25 ஆம் திகதிகளில் மட்டுமே!

| LAP – 04 | LAP – 02 | LAP – 03 | LAP – 01 | LAP – 05 | LAP – 06 |
|---|---|---|---|---|---|
| HP 15- R231TX CORE I3 5010U 5TH GEN. 4GB DDR III 500 GB H.D.D. 15.6" LED. DVD R.W NVIDIA GRAPHICS CARD FREE DOS | HP 15-RO10 TU INTEL D. CORE N3530 2GB DDR III 500GB H.D.D DVD R.W 15.6" LED. FREE DOS | HP 15RO 103NE. CORE I3 4th GEN 4GB DDN III 500 GB H.D.D 15.6" LED WIN -8 ORIGIONAL | HP 14 GOO 3AU D .CORE. 2GB DDR III 500 GB H.D.D DVD R.W 14.0" LED. FREE DOS | HP 15 RO12 TX I5 – 4010U 4TH Gen 4GB DDR III 500 GB H.D.D 15.6" LED. NVIDIA GRAPHICSCARD FREE DOS | DELL 3542 I3 -4005U 4th 4GB DDR III 500 GB H.D.D 15.6" LED. DVD R.W FREE DOS |
| 65900/= | 52500/= | 66500/= | 43500/= | 76500/= | 61900/= |

Free K7 TOTAL SECURITY Antivirush, Mouse, Headphone, Laptop Sticker. 1 year Warranty, 2years Service

No. 195/4, Parameswara Junction, Palaly Road.

021 222 1121 077 766 7975 021 222 4994 facebook.com/nalin_it

Branch: No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2222 077 714 0431



விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண்,பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசிய மில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C4000)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.